E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஜூன் 24 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 91 இல. 148 | Saturday 24, June, 2023 | 11 பக்கங்கள்

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் நியமனம்



இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோவை நியமிக்க அரசியலமைப்பு பேரவை அனுமதி வழங்கியதை தொடர்ந்து, அந்த ஆணைக்குழுவின் தலைவராக

06

## இலங்கையின் மறுசீரமைப்புக்கு ஐக்கிய அமெரிக்கா ஒத்துழைப்பு

### ஜனாதிபதியிடம் USA திறைசேரியின் செயலர் ஜெனட் யெலன் உறுதி



இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக, ஐக்கிய அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன் உறுதியளித்துள்ளார்.

புதிய நிதி ஒப்பந்தத்துக்கான தலைவர்களுக்கான மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரான்ஸுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன் ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் (22) நடைபெற்ற சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம், இலங்கையில் நடைமுறையிலிருக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

06

## பல்கலை மாணவர்களுக்கு வட்டியில்லா கடனுக்கு ஏற்பாடு

### பேச்சுவார்த்தை நடத்தி அரசு துரித நடவடிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நிதிப் பிரச்சினையை முகாமைத்துவம் செய்து அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமல்லாது, தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வட்டியில்லாக் கடனை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படுமென, பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பாக தற்போது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும், பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

"பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கப்பெற்ற மாணவர்களுக்கு பட்டம் வழங்கும் கல்வி நிறுவனங்களில் உயர் கல்வியை

06



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் அழைப்பின் பேரில் 'புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரான்ஸுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவுடன் பிரான்ஸ் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான எலிசி மாளிகைக்கு சென்ற போது...

## இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே சுற்றுலா, பொருளாதார ஒத்துழைப்பு

### பிரதமர் தினேஷ், தூதுவர் பாக்லே கலந்துரையாடல்



இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான சுற்றுலா மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான உத்தேச திட்டங்கள் தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயுடன் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்துரையாடியுள்ளார். அலரி மாளிகையில் பிரதமர்

06



### இ.தொ.கா. பலம் மிக்க சக்தியாக இன்று திகழ காரணம் அமரர் முத்து சிவலிங்கமே

அனுதாபப் பிரேரணையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

03

# நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கு கடன் மறுசீரமைப்பு பெரும் சவால்

### முறையாகவும் செயற்றிறனுடனும் எதிர்கொள்ள வேண்டியது அவசியம்

நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் எதிர்கொண்டு வருகின்ற கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட சவால்களை முறையாகவும் செயற்றிறனுடனும் எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

பெரிஸ் நகரில் நேற்று முன்தினம் (22) ஆரம்பமாகிய புதிய நிதி ஒப்பந்தத்துக்கான அமர்வுக்கு இணையாக நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலொன்றில் கலந்துகொண்ட போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை கொண்டிருக்கும் அனுபவங்களை எடுத்துரைத்த ஜனாதிபதி, இலங்கை தற்போது வரையறுக்கப்பட்ட நிதி வசதிகள் தொடர்பான பிரவேசத்துக்குள் மட்டுப்பட்டு கிடப்பதாகவும் நாட்டில் நிதி மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

06



பெரிஸ் நகரில் ஆரம்பமான புதிய நிதி ஒப்பந்த அமர்வுக்கு இணையாக நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

### கனடா பிரதமரின் அறிக்கையை எதிர்த்து

## தூதரகத்தின் முன்பாகவும் கிழக்கிலும் ஆர்ப்பாட்டங்கள்



இலங்கை தொடர்பாக கனடா பிரதமர் வெளியிட்ட அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று நேற்று வெள்ளிக்கிழமை (23) முன்னெடுக்கப்பட்டது.

சிங்கள ராவய தலைமையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவுக்கு முன்னாலும் ஆர்பாட்டம் நடைபெற்றது.

பயங்கரவாத பிரிவினைக்கு கனடா ஆதரவா? இதுவா அமைதி இதுவா நீதி, ஐ.நாவின் கோட்பாடுகளை மீறி கனடா அரசு இலங்கை உள் விவகாரங்களில் தலையிடுவதை கண்டிப்போம், எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

## இந்திய வீடமைப்புத்திட்டம் குறித்து பாரதப் பிரதமருடன் கலந்துரையாடல்

### மலையகம் 200 தொடர்பாகவும் பேசுவோம்



**அமைச்சர் ஜீவன் தொண்டமான்**

இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்கு ஜனாதிபதி செல்லும் போது தானும் அவருடன் செல்லவுள்ளதாகவும் அப்போது, மலையகத்தில் அமைக்கப்படவுள்ள இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும் மலையகம் 200 சம்பந்தமாகவும் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளதாகவும், இ.தொ.கா.

06

## அமெரிக்க சுதந்திர பிரகடனத்தின் 247ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு



### பிரதம அதிதியாக அமைச்சர் அலி சப்ரி

அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தின் 247ஆம் ஆண்டு நிறைவையும், அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலான வலுவான மற்றும் நீடித்த பங்காண்மையின் 75ஆம் ஆண்டு நிறைவையும் குறிக்கும் வகையில், (22) கொழும்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஏற்பாடு செய்த நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்து கொண்டார்.

## DIG தென்னகோனின் ரிட்மனு மீதான தீர்ப்பு திங்கள் அறிவிப்பு

### ஒத்திவைத்தது மேன்முறையீட்டு நீதிமன்று



மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் சமர்ப்பித்த ரிட்மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் திங்கட்கிழமை (26) வரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

போராட்டச் செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதி மாளிகையினுள்

06

### கொழும்பில் தொழில் புரியும் தந்தையை காண

## அம்பாறையிலிருந்து சைக்கிளில் வர முயற்சித்த சிறுவன் மீட்பு

### கல்முனை பொலிஸாரால் தாயிடம் ஒப்படைப்பு



கொழும்பில் தொழில் புரியும் தனது தந்தையை பார்ப்பதற்காக அதிகாலை வேளையில் சைக்கிளில் கொழும்புக்கு வர முயற்சித்த சிறுவனை மீட்ட கல்முனை தலைமையக பொலிஸார், தாயாரிடம் அச்சிறுவனை ஒப்படைத்தனர். அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று

06

### டைட்டானிக் சிதைவுகளை பார்வையிடுவதற்காக

## டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலில் சென்ற ஐவரும் உயிரிழப்பு



### அமெரிக்க கடலோர காவற்படை அறிவிப்பு

**டைட்டானிக் கப்பலின் சிதைவுகளை பார்வையிடுவதற்காக (OceanGate_Titan) டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலில் பயணித்த ஐந்து பேரும் உயிரிழந்துள்ளதாக, அமெரிக்க கடலோர காவல்படை அறிவித்துள்ளது. டைட்டானிக் சிதைவுகளுக்கு அருகில் நீர்மூழ்கியின் சிதைவடைந்த ஐந்து பாகங்களை கண்டுபிடித்துள்ளதாக, அமெரிக்க கடலோர காவல்படையைச் சேர்ந்த ரியர் அட்மிரல் ஜோன் மகுவர் உறுதி செய்துள்ளார்.**

**கண்டுபிடிக்கப்பட்ட சிதைவுகள், ஒரு**

06

## குமார் குணரட்ணத்தின் மனு மீது விசாரணை

### உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது



முன்னிலை சோஷலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரட்ணம் உள்ளிட்ட 40 பேர் தாக்கல் செய்த மூன்று அடிப்படை உரிமை மனுக்களை விசாரிக்க உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அமெரிக்காவில் கறுப்பின மக்கள் துன்புறுத்தப்படுவதை கண்டித்து,

06

## ஜூன் 30ஆம் திகதி சிறப்பு விடுமுறை

### வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு



ஜூன் 30ஆம் திகதியை சிறப்பு வங்கி விடுமுறையாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கான வர்த்தமானி அறிவித்தல் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவினால் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி ஹஜ் பெருநாள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் இன்று 16 மணிநேர நீர்வெட்டு

### அவசர திருத்தப் பணிகள் காரணமாம்



கொழும்பின் சில பகுதிகளில் இன்று சனிக்கிழமை (24) 16 மணிநேர நீர் வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு 11, 12, 13, 14, 15 ஆகிய பகுதிகளில் நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்தது.


இன்று காலை 8.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணிவரை 16 மணிநேர

06

## சர்வதேச செய்திகள்

# காணாமல்போன நீர்மூழ்கி வெடித்து சிதறியதன் பாகங்கள் கண்டுபிடிப்பு

**ஐவரும் உயிரிழந்தது உறுதி**





டைட்டானிக் கப்பலின் சிதைவுகளை பார்வையிடச் சென்று ஐந்து பேருடன் காணாமல்போன ஆழ்கடல் நீர் மூழ்கிக் கப்பல் வெடித்ததன் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதோடு அதில் இருந்த அனைவரும் உயிரிழந்திருப்பதாக அமெரிக்க கடலோர காவல் படை அறிவித்துள்ளது.

இதனை அடுத்து கடந்த ஞாயிறன்று காணாமல்போது அந்த நீர்மூழ்கியை தேடும் சர்வதேச மீட்பு நடவடிக்கைகள் கடந்த வியாழக்கிழமை (22) முடிவுக்கு வந்தது.

கனடா கப்பலில் இருந்து அனுப்பப்பட்ட ரொபோ டைவிங் வாகனம், டைட்டானிக் கப்பலில் இருந்து சுமார் 490 மீற்றர் தொலைவில் கடலுக்கடியில் காணாமல்போன டைட்டன் நீழ்மூழ்கியின் பாகங்களை கண்டுபிடித்துள்ளது.

இது வட அட்லாண்டிக்கின் தொலைதூர முனை ஒன்றில் மேற்பரப்புக்கு கீழால் சுமார் 4 கி.மீ ஆழத்தில் இருந்துள்ளது என்று அமெரிக்க கடலோர காவல் படையின் ரியர் அட்மிரல் ஜோன் மவுகர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த டைட்டன் நீர்மூழ்கி அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட நிறுவனம் ஒன்றாலேயே இயக்கப்பட்டு வந்தது.

அது உலகின் பிரபல கப்பல் சிதைவான டைட்டானிக்கை பார்வையிடப் புறப்பட்டு ஒரு மணி 45 நிமிடங்களின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தொடர்பை இழந்தது.

அப்போதே அந்த நீர்மூழ்கிக் கப்பல் செயலிழந்துவிட்டதா அல்லது பின்னர் அது நிகழ்ந்ததா என்பதை உறுதியாகக் கூற முடியாதுள்ளது என்று மவுகர் தெரிவித்துள்ளார்.

6.7 மீற்றர் நீளமான டைட்டனின் ஐந்து பிரதான பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் அந்த நீர்மூழ்கிக் கப்பலின் வால் கூம்பு மற்றும் உடற்பகுதியின் இரு பிரிவுகளும் அடங்குவதாக கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் அங்கு உடல் எச்சங்கங்கள் இருந்தது பற்றி எந்த விபரமும் வெளியிடப்படவில்லை.

'(நீர்மூழ்கியின்) பாகங்கள் இருக்கும் தளம் அந்த வாகனம் பயங்கர வெடிப்பு ஒன்றுக்கு முகம்கொடுத்திருப்பதை காட்டுவதாக உள்ளது' என்று ரியர் அட்மிரல் மவுகர் தெரிவித்தார்.

முன்னதாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அந்த நீர்மூழ்கிக் கப்பல் நிறுவனமாக ஓசியன்கேட் எக்ஸ்படிசன் இரங்கல் தெரிவித்தது.

'உயிரிழந்த பயணிகள் கடல்களை ஆராய்வதிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். அவர்களின் நினைவுகள் எப்போதும் எங்கள் மனதில் நிலைத்து நிற்கும். அவர்களின் குடும்பங்களுக்கு எங்களது ஆழ்ந்த இரங்கல்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த நீர்மூழ்கி கப்பலில் பிரிட்டன் நாட்டு பெரும் செல்வந்தரான 58 வயது ஹேமிஷ் ஹார்டிங், பிரிட்டிஷ் பிரஜைகளான பாகிஸ்தானில் பிறந்த வர்த்தகரான 48 வயது ஷஹசதா தாவூத், அவரது 19 வயது மகன் சுலைமான், பிரான்ஸ் நாட்டு கடல் ஆய்வாளரான 77 வயது போல் ஹென்ரி நார்கியோலட் மற்றும் நீர்மூழ்கிக் கப்பலை செலுத்திய ஒசியன்கேட் நிறுவன தலைமை நிர்வாகியான 61 வயது ஸ்டொக்டன் ரஷ் ஆகியோர் இருந்தனர்.

இந்த நீர்மூழ்கிக் கப்பலை தேடும் பணியில் பல நாடுகளைச் சேர்ந்த மீட்புக் குழுவினர் பல நாட்களாக ஈடுபட்டு வந்தனர். இதன்போது மீட்புப் பணிகளுக்காக விமானங்கள் மற்றும் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன.

கடந்த வாரம் கிரேக்க கரைக்கு அப்பால் 82 பேருக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டு நூற்றுக்கும் அதிகமானவர்கள் காணாமல் போன குடியேறிகள் படகு விபத்தின் மீட்புப் பணியை விடவும் இந்த தேடுதலுக்கு உலகெங்கும் அதிக அவதானம் சென்றமை குறிப்பிடத்தக்கது. கனேடிய விமானத்தில் இருந்து போடப்பட்ட சோனார் மிதவைகள் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் கடலுக்கடியில் சத்தத்தை அவதானித்ததால் மீட்புப் பணிகளில் நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

எனினும் அந்த சத்தத்தை ஆராய்ந்தபோது அது என்னவென்று கண்டறியப்படாது இருந்ததோடு அது நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து வராததாகவும் இருக்கலாம் என்று அதிகாரிகள் குறிப்பிட்டிருந்தனர்.

'இரைச்சல்களுக்கும், கடலின் அடிவாரத்தில் இருக்கும் குப்பைக் தளத்தின் இருப்பிடத்திற்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை' என்று ரியர் அட்மிரல் மவுகர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அமெரிக்க கடற்படையின் பகுப்பாய்வின்படி, நீர்மூழ்கிக் கப்பலின் இருப்பிடத்திற்கு அருகில் அதன் தொடர்பு இழந்தபோது 'ஒரு வெடிப்பு அல்லது வெடிப்புடன் ஒத்துப்போகும் ஒழுங்கின்மை' கண்டறியப்பட்டதாக ஒப்புக்கொண்டது.

இந்த சத்தமானது எதிரி நீர்மூழ்கிக் கப்பல்களை கண்டறிவதற்காக வடிவமைக்கப்பட்ட உச்ச இரகசிய அமைப்பு ஒன்றினாலேயே கண்டறியப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் ரோபோ வாகனம் தொடர்ந்து ஆதாரங்களை திரட்டும் என்று ரியர் அட்மிரல் மவுகர் குறிப்பிட்டுள்ளார். எனினும் விபத்தின் பண்பு மற்றும் கடல் ஆழத்தில் உள்ள கடுமையான சூழலுக்கு மத்தியில் உயிரிழந்தவர்களின் எச்சங்களை மீட்பது பற்றி நிச்சயமற்ற நிலை உள்ளது.

டைட்டானிக் கப்பல் தனது முதல் பயணத்திலேயே 1912 ஆம் ஆண்டு பனிப்பாறையில் மோதி மூழ்கியது. இதில் 1500க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். அந்தக் கப்பலின் சிதைவுகள் நியூ பௌன்ட்லாண்ட் தீவின் செயிட்ன் ஜோன்ஸ் நகருக்கு தெற்காக சுமார் 435 மைல்கள் தொலைவில், 4 கி.மீ ஆழத்தில் உள்ளது.

இந்தக் கப்பல் சிதைவுகளை நீர்மூழ்கிக் கப்பலில் பார்வையிடச் செல்லும் சுற்றுலா பயணம் கடந்த 2021 ஆம் தொடக்கம் செயற்பட்டு வருகிறது. இதற்காக ஒருவரிடம் இருந்து 250,000 அமெரிக்க டொலர்கள் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பீஜிங்கில் கடும் வெப்பம்



சீனத் தலைநகர் பீஜிங்கில் நிலவும் அளவுக்கு அதிகமான வெப்பத்தால் உச்சக்கட்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பீஜிங்கின் பெரும்பாலான பகுதிகளில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸை எட்டக்கூடும் என்று வானிலை அதிகாரிகள் கூறினார். நகரில் கடந்த வியாழனன்று 41.1 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது.

வெளிப்புறங்களில் அதிக நேரம் உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்கும்படியும் சூரிய கதிர்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதிகாரிகள் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டனர்.

கடந்த வாரம் நாட்டின் வடக்கு, கிழக்கு வட்டாரங்களின் சில பகுதிகள் சுட்டெரிக்கும் வெயிலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

**ஐந்து நட்சத்திர ஹோட்டலில்**

## இரண்டு ஆண்டுகள் இலவசமாக தங்கியிருந்த ஆடவர் பிடிபட்டார்



இந்திய தலைநகர் டெல்லியில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் சுமார் இரண்டு ஆண்டுகள் எந்தப் பணமும் செலுத்தாமல் தங்கி இருந்ததாக ஆடவர் ஒருவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஹோட்டல் நிர்வாகத்தை ஏமாற்றி 603 நாட்கள் தங்கி இருந்த ஆடவர் பற்றி கண்டறியப்பட்டதை அடுத்து டெல்லி விமானநிலையத்திற்கு அருகில் உள்ள ரொசேட் ஹோட்டல் முகாமையாளர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

அவர் இந்திய நாணயப்படி 5 மில்லியன் ரூபாவுக்கு மேல் அந்த ஹோட்டலுக்கு நிலுவை வைத்துள்ளார்.

அந்த ஆடவர் ஹோட்டல் ஊழியர்களுடன் சேர்ந்து அந்த பெருந்தொகை கட்டணத்தை மறைத்திருப்பதாக குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரை ஒருவரும் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பில் கடந்த மே 24ஆம் திகதியே பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்தபோதும் இந்த விபரம் அண்மையிலேயே ஊடகங்களுக்கு தெரியவந்துள்ளது.

பெயர் வெளியிடப்படாத அந்த ஆடவர் 2019 மே 30 ஆம் திகதி ஒரு நாளைக்கு அந்த ஹோட்டல் அறையை பதிவு செய்தபோதும் 2022 ஜனவரி 22 ஆம் திகதி வரை அங்கு தங்கி இருந்திருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அவர் கட்டணம் செலுத்தாதபோதும் ஹோட்டல் ஊழியர் ஒருவர் அவர் தங்கியிருக்கும் காலத்தை நீடித்து வந்திருப்பதாக அந்த செய்தி கூறுகிறது.

இந்நிலையில் தற்போது தலைமறைவாகி உள்ள அந்த ஆடவரை பொலிஸார் தேடி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

## குடியேறிகள் படகு மூழ்கி 30க்கும் மேற்பட்டோர் பலி



கனாரி தீவுகளுக்கு அப்பால் அட்லாண்டிக் கடலில் குடியேறிகள் படகு ஒன்று மூழ்கியதில் 30க்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

அந்தப் படகில் சுமார் 60 பேர் இருந்திருப்பதாக இரு தன்னார்வ தொண்டு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதில் ஒரு சிறுவன் மற்றும் பெரியவர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் 24 க்கும் அதிகமானவர்கள் உயிருடன் காப்பற்றப்பட்டதாகவும் ஸ்பெயின் நிர்வாகம் மற்றும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படகு கிரான் கனாரியாவின் தென்கிழக்காக சுமார் 100 மைல் தொலைவில் கடந்த புதன்கிழமை (21) மூழ்கியுள்ளது.

ஸ்பெயினின் அங்கமாக உள்ள ஆபிரிக்காவின் மேற்குக் கரையில் இருக்கும் கனாரியா தீவுகள், ஆபிரிக்காவில் இருந்து வரும் பெரும்பாலான குடியேறிகள் ஐரோப்பிய தலைநிலத்தை அடையும் பாதையாக உள்ளது.

## நுளம்புகளை சமாளிக்க சுகாதார அமைப்பு தயார்



உலக சுகாதார அமைப்பு எல் நினோ பருவநிலையால் டெங்கு, ஸிக்கா போன்ற நோய்ப் பரவலை எதிர்கொள்ளத் தயாராகியுள்ளது.

மூவாண்டுகளாகத் தொடர்ந்த லா நினா பருவநிலையை அடுத்து எல் நினோ திரும்பியுள்ளது. இந்த ஆண்டின் பிற்பகுதியில் அது வானிலையை மோசமாக்கக்கூடும். சூறாவளி, பலத்த மழை, வறட்சி போன்றவை ஏற்படக்கூடும் என்று கூறப்படுகிறது.

நுளம்புகள் மூலம் பரவும் வைரஸ்களை சமாளிக்க உலக சுகாதார அமைப்பு கடந்த ஆண்டு உலகளாவிய இயக்கமொன்றை ஆரம்பித்தது. பருவநிலை மாற்றம் நுளம்புகளின் பெருக்கத்தை அதிகரிப்பதாக அது எச்சரித்தது.

அண்மைய ஆண்டுகளில் டெங்குவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக வட, தென் அமெரிக்காவில் அது கூடியுள்ளது.

கொவிட்–19 நோய்க்கு எதிராக உலக நாடுகள் எடுத்த நடவடிக்கைகளையே டெங்கு போன்ற மற்ற நோய்களுக்கும் பின்பற்றலாம் என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை பணிப்பாளர் டெட்ரோஸ் கேப்ரியேசஸ் தெரிவித்தார்.

## பேஸ்புக்கில் செய்தி பார்க்க கட்டுப்பாடு




பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் சமூக ஊடகங்கள் கனடா நாட்டு பயணங்கள் அந்நாட்டு செய்திகளை பார்ப்பது முடக்கப்படவுள்ளது. அவ்வாறான செய்திகளுக்கு அந்த சமூக ஊடகங்கள் பணம் செலுத்தும் வகையில் கனடாவில் சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கனடா செய்தி நிறுவனங்களின் செய்திகளை பகிர்வதற்கு சமூக ஊடகங்கள் அந்த நிறுவனங்களுக்கு பணம் செலுத்த புதிய சட்டம் கூறுகிறது.

பேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெடா மற்றும் கூகுள் நிறுவனங்கள் ஏற்கனவே கனேடியர்களுக்கு செய்திகளை கட்டுப்படுத்துவதற்கான சோதனைகளை முன்னெடுத்துள்ளது.

2021இல் அவுஸ்திரேலியாவில் இதேபோன்ற ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டதை அடுத்து அந்நாட்டு பயனர்கள் செய்திகளை பார்ப்பது அல்லது பகிர்வது முடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிரேக்க படகு விபத்து: 145 குடியேறிகள் மீட்பு



கிரேக்க அதிகாரிகள் நாட்டின் வட பகுதியில் உள்ள தீவில் சிக்கியிருந்த 145 குடியேறிகளைக் காப்பாற்றியுள்ளனர்.

அவர்களோடு அந்தப் படகில் குறைந்தது 209 பாகிஸ்தானியர்களும் இருந்ததாகத் தகவல் வெளியிடப்பட்டது. படகில் பயணம் செய்தோரின் குடும்பங்கள் முன்வந்து கூறிய விபரங்களை வைத்து அந்த எண்ணிக்கை தரப்பட்டதாக மத்தியப் புலனாய்வுத் துறை தெரிவித்தது.

அண்டை நாட்டைச் சேர்ந்த ஆட்கடத்தல்காரர்கள் குடியேறிகளை அங்கு விட்டுச்சென்றதாக பொலிஸார் கூறினர்.

ஐரோப்பாவுக்குச் செல்லக் குடியேறிகள் அந்த வழியே செல்வது வழக்கம் என்பதை அதிகாரிகள் உறுதிசெய்தனர். அதற்குத் துருக்கியே இடம்கொடுப்பதாக அவர்கள் அடிக்கடி குறைகூறியிருக்கின்றனர்.

அண்மையில் கிரேக்கத்திற்கு அப்பால் உள்ள கடலில் அளவுக்கு அதிகமான குடியேறிகளை ஏற்றிச்சென்ற கப்பல் கவிழ்ந்ததில் 82 பேர் உயிரிழந்தனர். நூற்றுக் கணக்கானோரை இன்னமும் காணவில்லை.

## இந்திய – அமெரிக்க நட்பு உலக வளர்ச்சிக்கு உதவும்



இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான கூட்டாண்மை, உலகளாவிய நிலைபேறான அபிவிருத்திக்கு பின்புலமாக அமையும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர், அலெக்ஸாண்ட்ரியாவில் அமைந்திருக்கும் தேசிய விஞ்ஞான மன்றத்தில் உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார்.

"எதிர்காலத்திற்கான திறன்கள்" என்ற தொனிப்பொருளில் உரையாற்றியுள்ள பிரதமர் மோடி, அபிவிருத்தியின் வேகத்தைத் தொடர்ந்தும் பேணுவதற்கு திறமைகள் இன்றியமையாதது. அந்த வகையில் அமெரிக்கா உயர்தர கல்வி நிறுவனங்களையும் மேம்பட்ட தொழில்நுட்பங்களையும் கொண்டிருக்கின்ற அதே நேரம், இந்தியா உலகிலேயே மிகப் பாரிய இளைஞர் வளத்தைக் கொண்டுள்ளது. ஆகவே இந்தியாஅமெரிக்க கூட்டாண்மை நிலைபேறான உலகளாவிய வளர்ச்சியின் இயந்திரமாக அமையும் என்று நான் நம்புகிறேன் என்றும் கூறியுள்ளார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூன் 24 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN




தொழுகை நேரம்
சுபஹ் - 04.33
ளுஹர் - 12.14
அஸர் - 03.41
மஃரிப் - 06.29
இஷா - 07.45

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆணி 10
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

எக்ஸ்பிரஸ் பேர்ள், நியூ டயமன்ட் அனர்த்தம்

## விரிவான விசாரணையை ஆரம்பிக்க பாராளுமன்ற விசேட குழு தீர்மானம்



இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்ற நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழு அண்மையில் தீர்மானம் எடுத்தது.

அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் இந்த விசேட குழு, முதல் தடவையாக கடந்த 20ஆம் திகதி கூடியதுடன், குழுவின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக அடிப்படை விடயங்கள் இதில் கலந்துரையாடப்பட்டன.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்தல், சுற்றுச்சூழல் பாதிப்புகள், ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதா?, அது தொடர்பாக அரச பொறிமுறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா? போன்ற விடயங்களை கலந்துரையாடவுள்ளதாக, குழுவின் தலைவர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கும் அவ்வாறான அவசர நிலையை எதிர்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்தக் குழு பரிந்துரைகளை வழங்குமெனவும், அவர் தெரிவித்தார்.

குழுவின் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துகளை பெறுவதற்கும் அது தொடர்பான பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதற்கும் இரண்டு வாரகால அவகாசம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த விசேட குழுவை எதிர்வரும் 27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதில் இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம், கலாநிதி சரத் வீரசேகர, நிரோஷன் பெரேரா, நிமல் லான்சா, அகில எல்லாவல, நாலக பண்டார கோட்டேகொட, சட்டத்தரணி மதுர விதானகே ஆகியோரும் பாராளுமன்ற சட்டவாக்க திணைக்களத்தின் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்கள பதில் பணிப்பாளருமான எச்.ஈ.ஜனகாந்த சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இ.தொ.கா. பலம் மிக்க சக்தியாக இன்று திகழக் காரணம் அமரர் முத்து சிவலிங்கமே

அனுதாபப் பிரேரணையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்தளவு பலமான சக்தியாக இன்று திகழ்வதற்குக் காரணம், அதன் பெரும் தூணாக இருந்து உழைத்த முத்துசிவலிங்கமே என, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் முதுகில் குத்தி விட்டும் காட்டிக்கொடுத்து விட்டும் கட்சியிலிருந்து வெளியேறி சென்றவர்கள் பலர். ஆனாலும், அவருடன் தோளோடு தோளாக நின்று அவருக்கும் கட்சிக்கும் பலம் சேர்த்தவர் அமரர் முத்து சிவலிங்கமே எனவும், அமைச்சர் தெரிவித்தார்.

50 வருடங்களுக்கு மேலாக சிறந்த சேவையையும் சிறந்த தலைமைத்துவத்தையும் வழங்கி மிகச் சிறந்த முன்மாதிரியான தொழிற்சங்கவாதியாகவும் அரசியல்வாதியாகவும் திகழ்ந்தவர் அமரர் முத்து சிவலிங்கம் எனவும், அவர் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸினுடைய முன்னேற்றத்துக்கு முக்கிய தூணாக திகழ்ந்தவர். அதே போன்று, இலங்கை தொழிலாளர் காங்கிரஸை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் உழைத்தவர். அவரை போன்றதொரு தலைவரை மீண்டும் உருவாக்க முடியாதென்ற அளவுக்கு அவர் பெருமைக்குரியவர் எனவும், அமைச்சர் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்னாள் பிரதியமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் மற்றும் பொதுச் செயலாளருமான அமரர் முத்து சிவலிங்கம் உட்பட நான்கு முன்னாள் எம்.பி.க்கள் மீதான அனுதாபப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

"அமரர் முத்துசிவலிங்கம் மிகவும் அமைதியான மனிதர். தாம் மட்டுமன்றி மற்றவர்களையும் அரவணைத்து வளர்த்துவிடும் பண்பு கொண்டவர். அவ்வாறு பெருமளவிலானோரை அவர் வளர்த்து விட்டுள்ளார்.

அவரது மரணம் சம்பவித்த போது, நான் சபரிமலைக்காக மாலை அணிந்திருந்ததால் அவரது மரண வீட்டுக்கு செல்ல முடியாமல் போய்விட்டது. அந்த வருத்தமும் வலியும் இன்னும் என் மனதில் உள்ளது.

கட்சி ரீதியாகவும் நாம் அவருக்கு துரோகம் செய்துவிட்டதாக எண்ணுகின்றோம். அவர் 50 வருடங்களுக்கு மேலாக கட்சிக்காகவும் மலையக மக்களின் உயர்வுக்காகவும் உழைத்தவர். அவருக்கு உரிய கௌரவத்தையும் மரியாதையையும் நாங்கள் கொடுத்தோமா என்பதில் எமக்கு சந்தேகம் உள்ளது.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இறந்த பின்னர், நாம் அனைவரும் இணைந்தே கட்சியை முன்னெடுத்தோம். அப்போது பல சிக்கல்களையும் பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்கொள்ள நேர்ந்தது. அதன்

06

## கதிர்காமத்துக்கு பாதயாத்திரை சென்றவர் பாம்பு தீண்டி மரணம்

**காரைதீவு குறூப் நிருபர்**

கதிர்காமத்துக்கு காட்டுவழியில் பாதயாத்திரை சென்ற ஒருவர், குமுக்கன் காளியம்மாள் ஆலய பகுதியில் நேற்று முன்தினம் (22) பாம்புக் கடிக்குள்ளாகி மரணமடைந்துள்ளார்.

தம்பிலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய லிங்கசாமி கேதீஸ்வரன் என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இப்பாதயாத்திரிகர் தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக கடந்த இரு தினங்களுக்கு முன்னர் உகந்தை முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்கு பாதயாத்திரையை ஆரம்பித்து சென்றுகொண்டிருந்த போது, இவரது காலில் பாம்பு கடித்து மயக்கமடைந்துள்ளார்.

உடனடியாக இவரை திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸில் சுகாதார பிரிவினர் கொண்டு சென்றனர். எனினும், அங்கு மரணமடைந்த இவரின் சடலத்தை ஒப்படைத்துள்ளதாக, திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

## இந்தியா–அமெரிக்க கூட்டாண்மை முன்பைவிட இன்று வலுவாக உள்ளது

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்

கடந்த பத்தாண்டுகளில் சிறிய படிகள் பெரிய முன்னேற்றமாக மாறியுள்ளதுடன், இன்று எமது நாடுகளுக்கிடையேயான கூட்டாண்மை முன்னெப்போதையும் விட வலுவாக உள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான இருதரப்புச் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், இந்தாண்டு ஜி20 மாநாட்டை நடத்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எடுத்த முடிவுக்கு நன்றி தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், எமது கூட்டாண்மையை எவ்வாறு வலுப்படுத்துவதென்பதை விவாதிக்க ஆவலுடன் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

விண்வெளி, கடல்சார் தொழில்நுட்பம் மற்றும் பசுமைத் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியாவும் அமெரிக்காவும் ஒத்துழைத்து வருவதாகவும், அவர் தெரிவித்தார்.



இதற்கிடையில், வெளியுறவு அமைச்சகத்தின் (MEA) அதிகாரபூர்வ செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி நேற்று முன்தினம் ட்வீட் தகவலை வெளியிட்டார். அதில் "விரிவான உலகளாவிய மூலோபாய கூட்டாண்மையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்கான அவர்களின் உறுதியுடன் ஒன்றாக பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அவர்கள் இருவரும் இந்தியா அமெரிக்கா

06

## இந்திய கைத்தறி நெசவாளர்கள் சங்கம் துணை உயர்ஸ்தானிகருடன் சந்திப்பு



அனைத்து இந்திய நெசவாளர் சங்கத்தின் பிரதிநிதிகள், சென்னையிலுள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகரை அண்மையில் சந்தித்து, இந்தியாவில் கையால் நெய்யப்பட்ட ஆடைத்தொழிலின் வளர்ச்சி தொடர்பாக விளக்கமளித்துள்ளனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி தேசிய நெசவாளர் தின நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினராக பங்கேற்குமாறு துணை உயர்ஸ்தானிகருக்கு அச்சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கையில் சாத்தியமான கைத்தறி மற்றும் விசைத்தறி முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும், இந்திய நெசவாளர் சங்கத்தினருக்கு பிரதி உயர்ஸ்தானிகர் அழைப்பு விடுத்துள்ளார்.

## இலங்கை 'வானொலி மாமா' புகழ் மகேசன் சிட்னியில் காலமானார்



இலங்கை 'வானொலி மாமா' புகழ் மகேசன், அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார்.

இலங்கை வானொலியில் 'சிறுவர் மலர்' என்ற 45 நிமிட நேர நிகழ்ச்சி மூலம் 1965ஆம் ஆண்டு முதல் தனது கலைப் பணியை ஆரம்பித்து, 1981ஆம் ஆண்டுவரை விடாது நடத்தி வந்தார். இதனால், இவர் 'வானொலி மாமா' என சிறுவர்களாலும் பெரியவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டார். சிறுவர் மலர் நிகழ்ச்சியில் சிறுவர்களுக்கான நாடகங்களை எழுதியும் நெறிப்படுத்தியும் வந்தார்.

பிள்ளைக் கவியரசு அழ.வள்ளியப்பா போன்ற அறிஞர் பெருமக்களால் பாராட்டப்பட்ட இவர் சிட்னியில் வாழ்ந்து வந்தார்.

சிட்னியில் தமிழ்ச் சமூகத்துக்கு இவர் ஆற்றிய சேவையை பாராட்டி நியூ சவுத் வேல்ஸ் அரசு 2006ஆம் ஆண்டில் இவருக்கு 'THE ACHIEVER' என்ற விருதை வழங்கிக் கௌரவித்தது. சிட்னி கம்பன் கழகமும் இவரது சேவையை பாராட்டி

06

அரசாங்கத்தின் நிவாரண வேலைத்திட்டம்

## மதிப்பீடுகளை முறையாக முன்னெடுக்க தேவையெனின் தனியான திணைக்களம்

எதிர்க்கட்சி தலைவருக்கு பிரதமர் தினேஷ் பதில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கத்தின் நிவாரணக் கொடுப்பனவுத் திட்டத்தில் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் குறைபாடுகள் காணப்படுமாயின், வேறு தனியான திணைக்களமொன்றை ஏற்படுத்தி அதனூடாக அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியுமென, பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் நிவாரணத் திட்டத்தின் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக பாராளுமன்றத்தல் மேலும் தெரிவித்த பிரதமர்,

"மதிப்பீடுகளை மேற்கொள்ளும் சில திணைக்களங்கள் தொடர்பாக எதிர்கட்சி

06

சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகளுள்

## 30 வீதமானோர் நிவாரணம் பெறத் தகுதியற்றவர்கள்

பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அஸ்வெசும நிவாரணத் திட்டத்தை இடைநிறுத்த முடியாது. எனினும், அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென, பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சமுர்த்திப் பயனாளிகளில் 30 வீதத்துக்கும் அதிகமானோர் நிவாரணங்களை பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களென மதிப்பீட்டின் மூலம் தெரியவருவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அஸ்வெசும நிவாரணத் திட்டத்துக்காக இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் கோரப்படவுள்ளதுடன், இந்த வருடத்தில் விண்ணப்பிக்காதவர்கள் அதன் போது தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை

06

முகாமிலிருந்து தன்னை விடுவிக்க கோரி

## இலங்கை அகதி ஒருவர் உண்ணாவிரதம்; 05 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுப்பு

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

திருச்சி அகதிகள் சிறப்பு முகாமிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி இலங்கையைச் சேர்ந்த அகதியொருவர் ஐந்தாவது நாளாக நேற்றும் (23) உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் அகதிகள் சிறப்பு முகாம் அமைந்துள்ளது. சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றமை, போலி கடவுச்சீட்டு முறைகேடு உள்ளிட்ட வழக்குகளில் கைது செய்யப்பட்ட இலங்கை, நைஜீரியா, பல்கேரியா, இந்தோனேசியா, வங்கதேசம் உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளை சேர்ந்த சுமார் 100க்கும் மேற்பட்டோர் தற்போது இம்முகாமில்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை முடிந்து, விடுதலை செய்யப்பட்டாலும், வெளிநாடுகளின் குடியுரிமை பிரிவினர்

06

## ஜூலை இறுதியில் O/L விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் தெரிவிப்பு



கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்தவுடன், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படுமென, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள்களை ஜூலை மாத இறுதியிலிருந்து மதிப்பீடு செய்ய முடியுமெனவும், அவர் தெரிவித்தார். பரீட்சை பெறுபேறுகளை மாணவர்களுக்காக விரைவில் வெளியிடுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுப்பதாகவும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்

06

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.29 | 215.00 |
| கனடியன் டொலர் | 224.47 | 239.42 |
| யூரோ | 324.45 | 344.53 |
| ஜப்பான் யென் | 2.1010 | 2.2276 |
| சிங்கப்பூர் டொலர் | 220.86 | 235.11 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 379.69 | 402.23 |
| சுவிஸ் பிராங்க் | 329.51 | 352.41 |
| அமெரிக்க டொலர் | 298.47 | 314.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 811.99 | கட்டார் ரியால் | 84.04 |
| குவைத் டினார் | 996.76 | சவூதி ரியால் | 81.61 |
| ஓமான் ரியால் | 795.16 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 83.34 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 10ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 05



**குறள் தரும் சிந்தனை**

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்

மற்றவர்களை மதிக்காமலும், தன் வலிமையை உணர்ந்து கொள்ளாமலும், தன்னைத் தானே பெரிதாக விளம்பரப் படுத்திக் கொண்டிருப்பவர்கள் விரைவில் கெட்டுத் தொலைவார்கள்.

# அந்நிய செலாவணி அதிகரிப்புக்கு கைகொடுக்கும் சிறந்த வாய்ப்பு!

இலங்கையானது அந்நிய செலாவணிப் பற்றாக்குறையோடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் முகம்கொடுத்தது. அதனால் நாட்டில் எல்லா மட்ட மக்களும் இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களையும் பாதிப்புகளையும் எதிர்கொண்டார்கள். குறிப்பாக எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் துர்ப்பாக்கியமும் தலைதூக்கி இருந்தது. அத்தோடு அனைத்து பொருட்களதும் விலைகள் பெரிதும் அதிகரித்துக் காணப்பட்டன. இந்நிலைமை கடந்த வருடத்தின் பிற்பகுதி வரையும் நீடித்தது.

பொருளாதார நெருக்கடியின் பாரதூரத்தைக் கருத்தில் கொண்ட இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மாத்திரமல்லாமல் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் பலவும் இலங்கைக்கு உதவி ஒத்துழைப்புக்களை நல்கலாயின. இன்னும் பல நாடுகள் இலங்கைக்கு மனிதாபிமான ஒத்துழைப்புக்களை வழங்கவும் தவறவில்லை.

இவ்வாறான உதவி, ஒத்துழைப்புக்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முன்னெடுக்கப்படும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் என்பவற்றின் பிரதிபலனாகப் பொருளாதார ரீதியில் கட்டம் கட்டமாக மீட்சி பெற்றுவந்த இந்நாடு, குறுகிய காலப்பகுதிக்குள் மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கின்றது. அத்தோடு நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையிலான அடைவுகளையும் நாடு பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இவற்றின் ஊடாக புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புக்களும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் உலகின் பல நாடுகளும் இலங்கையருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்க முன்வந்துள்ளன. இதனை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாயக்கார நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார். அதாவது, 'உலகில் 41 நாடுகளில் இருந்து 1,273,428 பேருக்கான வேலைவாய்ப்பு அழைப்புக்கள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் மூன்று இலட்சம் பேரை இவ்வருட இறுதிக்குள் அனுப்பி வைப்பதே எமது இலக்கு' என்று குறிப்பிட்டிருக்கின்றார் அமைச்சர் மனுஷ நாணயக்கார.

இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும். இலங்கைக்கு மத்திய கிழக்கு நாடுகளும் மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா, தென்கொரியா உள்ளிட்ட சில நாடுகளும்தான் ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை வழங்கக் கூடியனவாக இருந்து வருகின்றன. ஆனால் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி மீட்சி பெற்றுவரும் இந்நாட்டுக்கு உதவி ஒத்துழைப்புகளை வழங்கும் வகையில் மேலும் பல நாடுகள் தொழில்வாய்ப்புக்களை வழங்க முன்வந்திருப்பதையே அமைச்சரின் இந்த அறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது. இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி மீட்சி பெற்றுவரும் இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு இவ்வேலைவாய்ப்புக்கள் பாரிய உந்துசக்தியாக அமையும். அதுவே தொழில்சார் நிபுணர்களின் கருத்தாகும்.

அதன் காரணத்தினால் இந்நாட்டுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள இவ்வேலைவாய்ப்புகளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் ஊடாக நாட்டுக்கு கிடைக்கப்பெறும் அந்நிய செலாவணியில் மேலும் அதிகரிப்பு ஏற்படும். அது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் ஸ்திரப்பாட்டுக்கும் பக்கத்துணையாக அமைவதோடு பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கிய பங்களிப்பை நல்கும்.

தற்போது இந்நாட்டுக்கு அந்நியச் செலாவணியை அதிகளவில் ஈட்டித் தரும் துறைகளில் ஒன்றாக வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை விளங்குகின்ற போதிலும், புதிதாகக் கிடைக்கப் பெற்றுள்ள வேலைவாய்ப்பு அழைப்புக்கள் இதனை மேலும் பலப்படுத்தி வலுப்படுத்த வழிவகுக்கும்.

அதன் காரணத்தினால் இத்தொழில் வாய்ப்புக்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்துகின்ற அதேநேரம், திறமை கொண்ட தொழிலாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு அனுப்பி வைப்பதிலும் அக்கறை எடுத்துக்கொள்ளத் தவறலாகாது. ஏனெனில் திறமை மிகு தொழிலாளர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பில் நல்ல சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படுவது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

ஆகவே தற்போது நாட்டுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும். அது நாட்டுக்கு கிடைக்கப்பெறும் அந்நிய செலாவணியை மேலும் அதிகரித்துக் கொள்ளச் செய்யும் பங்களிப்பாக அமையும். அத்தோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இவ்வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் உதவக் கூடியதாகவும் இருக்கும் என்றால் மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# தொன்மையும் தெய்வீக சக்தியும் பொருந்திய திருத்தலம் கதிர்காமம்



**கலாபூஷணம் மாத்தளை பெ.வடிவேலன் எழுதிய திருப்பள்ளியெழுச்சி நூல் இம்முறை கதிர்காமம் உற்சவ தினத்தின்போது வெளியீடு. இத்திருப்பள்ளி எழுச்சியை சியாமள சஞ்ஜீவனின் ஒலிப்பதிப்பில், திருமதி சியாமளாதேவி வடிவேலன் இசையமைத்து பாடிய இறுவட்டும் வெளியிடப்பட்டுள்ளது**



தொன்மையும், அளவிடற்கரிய தெய்வசக்தியும் கொண்ட முருகப்பெருமானின் திருத்தலம் கதிர்காமம் ஆகும். பண்டையகாலம் முதல் இலங்கையில் முருகவழிபாடு சிறப்புற்றிருந்திருக்கின்றது. இராமாயணம் முதலான புராண இதிகாசங்களிலும், மஹாவம்சம், ஸ்கந்தபுராணம், யாழ்ப்பாண வைபவமாலை, சீவகசிந்தாமணி உட்பட பல இலக்கியச் சான்றுகள் இதன் பழைமையை உணர்த்துவனவாகும். வடமொழி ஸ்கந்தபுராணத்தை அடியொற்றியெழுந்த தமிழ் ஸ்கந்தபுராணம் என்னும் நூலிலே 'வெள்ளியங்கிரியின் ஓர்சார்கந்தவெற்பு' என்னும் அடிகளில் கந்தவெற்பு என்பது கதிர்காமத்தையே குறிக்கின்றது.

மஹேந்திரபுரியை ஆண்ட சூரனையும், அவன் கிளைகளையும் அழிக்க முருகப்பெருமான் பாடி வீடமைத்து இலங்கையில் தங்கினார் என்பதும், அங்கிருந்து சென்றே மஹேந்திரபுரியிற் போர் செய்து வெற்றி கொண்டார் என்பதும் கந்தபுராணம் கூறும் செய்தியாகும். வடமொழி சுலோகத்தாலான 'தட்சணகைலாச மான்மியம்' என்னும் நூல் கதிர்காமகிரியிற் கோயில் உற்பத்தியான காலம் முதலானவற்றை விபரமாகக் கூறுகின்றது.

'கதிர்காமம்' என்பது தனித்தமிழ் சொற்றொடர், கதிர் என்பது ஒளி. முருகக் கடவுள் காமமாகிய இருப்பிடத்தில் குடிகொண்டுள்ளார் என்பது கருத்தாகும். இது இருமடியாகு பெயர். கதிர் என்பது ஒளி எனவும், அதாவது அன்பெனவும் கொண்ட கதிர்காமம் எனும் பெயருக்கு விளக்கமளிப்பர்.

கதிர்காமம் என்பது கார்த்திகேயக் கிராமம் என்பதன் சிதைவு என சேர். பொன்னம்பலம் அருணாசலம் கூறியுள்ளார். கம, காம என்பன ஊர் அல்லது குறிச்சியை குறிப்பன. கதிர்காமம் என்னும் சொல் யானை வாழும் கிராமம் எனப் பொருள்படும். 'கஜரகம' என்பதன் சிதைவெனக் கூறுவர்.

கதிரு என்ற நச்சுமரங்கள் அடர்ந்துள்ளதால் இக்கிராமம் கதிருகிராமம்' என மருவிக் 'கதிரம' என வழங்கியிருக்கலாம். இவை சிங்கள சொற்களாகக் காணப்பகின்றன. 'மஹாவம்சம்' என்ற சிங்கள நூலும் கி.பி. 17ம் நூற்றாண்டு யாழ்ப்பாணச் சரித்திரக்குறிப்புக்களை ஓரளவுக்கு எடுத்துக்கூறும் யாழ்ப்பாண வைபவமாலையும் கதிர்காமம் பற்றிய செய்திகளை நமக்களிக்கின்றன.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் உடையது கதிர்காமத் திருத்தலமாகும். இத்தலம் இலங்கையின் தென்பாகத்தே ஊவாமாகாணம் தெற்கே முடிவடையும் எல்லையில் 'தீயெனகம' என் காட்டுப்பகுதியில் அமைந்துள்ளது. 'நமுனகுலகந்த' மலையில் உற்பத்தியாகும் 'ப்ரப்பஓயா' மாணிக்கங்கை இத்தலத்துக்கூடாக பாய்ந்து தெற்கே இந்துமா கடலில் சங்கமிக்கின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலங்களைக் கொண்டது கதிர்காமம். கதிர்காமத்தை 'கதிரமலை' என வழங்குதலை அறிவோம். அதாவது கதிர்களை உடைய மலை. கடவுளர் அரக்கர்களை அழிக்கப் பூவுலகிற்கு வரும்போது வெற்றிவாகை சூடியபின் மானிட பெண்களை மணஞ்செய்தமை திரோதாயுகத்திலும், துவாபரயுகத்திலும் நடந்ததாக அறிகின்றோம். குறிஞ்சிநிலத் தெய்வமான முருகன் குறிஞ்சிநில மக்களான வேடரிடமிருந்து பெற்ற மணப்பெண்ணே வள்ளியம்மை.

கதிர்காமம் என்ற தலைப்பிலே வரலாற்றாய்வாளரான 'பரணவிதான' சில கல்வெட்டு ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளார். கதிர்காமத்தலத்திற்கு அண்மையிலுள்ள 'கிரிவிஹாரை' முகட்டிலிருந்து பெயர்ந்து விழுந்த கற்கள் சிலவற்றில் காணப்பட்ட 'பிராமி' எழுத்துக்கள் 'தெட்டகமுவை' கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நெய்வேத்திய விபரங்கள் என்பன முக்கிய ஆதாரங்களாகும்.

கதிர்காமத்தை மஹாசன் என்ற சிற்றரசன் ஆண்டபோது கி.மு 569 இல் புத்தபெருமான் இவ்விடத்தை தரிசித்தார். இதுவே இவரது இறுதிவருகை என்று அமரசேகர கூறுகின்றார். கி.மு 3ம் நூற்றாண்டில் புத்தபகவான் தியானத்தில் அமர்ந்த பதினாறு இடங்களில் மூன்றாவது இடம் கதிர்காமம் என பரணவிதான குறிப்பிட்டுள்ளார்.

அருணகிரிநாதர் கதிர்காம தலத்தின் மீது பதின்மூன்று படைவீடுகளோடு சேர்த்து ஏழு திருப்புகழும் பாடியுள்ளார். சிங்களப்புலவர் இராகுல இயற்றிய 'பரவிசந்தேசிய' என்ற 'புறாவிடுதூது' என்ற சிங்கள இலக்கியத்திலும் கதிர்காமம் பற்றிய பாடல் உண்டு.

எமகூடம், பூலோகசுந்தரி, காரிகாப்பு, பரபுரி, பஞ்சமூர்த்திவாசம், வில்வகானனம், சகலசித்திகரம், வன்னிமங்கலம், அகத்தியலிரியம், பிரம்மசித்தி, அவ்வியர்த்தமூர்த்தம், சித்தகேத்திரம், கதிரை, ஜோதிஸ்காமம் ஆகிய பெயர்களும் கதிர்காம தலத்தை குறிப்பனவாகும்.

செல்லக்கதிர்காமம் மருதமரங்கள் அடர்ந்த பிள்ளையார் ஆலயமாகும். மாணிக்கங்கை விரை ஓட்டத்துடன் குதித்தோடும் சூழலில் அமைந்துள்ளது. வள்ளியம்மை காவலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் தினைப்புனம், தயிர் கடைந்த இடம், வேங்கை மரமாக வேலவர் நின்ற இடம், அகப்பைகிணறு, முருகப்பெருமான் வள்ளியம்மையோடு ஒளிந்த புளியமரப்பொந்து, ஸ்வாமிமலை, ஏழுமலை, பிள்ளையார்மலை, வீரவாகுமலை, வள்ளிமலை, தெய்வாமையம்மன்மலை, வைரவர் மலை என்பனவும் இத்தலத்தின் சிறப்பம்சங்களாகும். இங்கு சுவாமி சன்னதியுடன் கூடிய புனிதபகுதியில் புத்த பெருமான் ஆலயம், மஹாகணபதி ஆலயம், மஹாவிஷ்ணு ஆலயம் என்பன உள்வீதியிலும், சூரன்கோட்டை அல்லது கிரிவிஹாரை, பத்தினி அம்மன் ஆலயம், வைரவர் ஆலயம், தெய்வானையம்மன் ஆலயம், வள்ளியம்மன் ஆலயம், முத்துலிங்கஸ்சுவாமி ஆலயம், பள்ளிவாசல் பால்குடிபாபா ஆகியன வெளிவீதியிலும் அமைந்துள்ளன.

இத்தலத்தோடு தொடர்புடையவர்களாக முத்துலிங்க ஸ்வாமிகள், ஐயங்கிரிஸ்வாமி, கெசப்புரிசுவாமி, பாலசுந்தா ஆலயம் ஆகியோரைக் குறிப்பிடலாம். இத்தலத்தைப் பற்றி பிரபந்தங்கள், பதிகங்கள் உட்பட கதிரைமலைப்பள்ளு முதலான நூற்றுக்கணக்கான இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆலயங்கள் தோறும் எழுந்து அருள்புரிகின்ற தெய்வங்களுக்கு திருப்பள்ளியெழுச்சி பாடப்படுவது திருக்கோயில்களில் தெய்வாம்சம் நிறைந்த நிகழ்வாகும். 'சுப்ரபாதம் கேட்டு மகிழாத உள்ளங்களும் உண்டா?

கலாபூஷணம் மாத்தளை பெ.வடிவேலன் எழுதிய இந்நூல் இம்முறை கதிர்காம மகா உற்சவ தினத்தின்போது வெளியிடப்படுகின்றது. இத்திருப்பள்ளி எழுச்சியை சியாமள சஞ்ஜீவனின் ஒலிப்பதிப்பில் திருமதி சியாமளாதேவி வடிவேலன் இசையமைத்து பாடிய இறுவட்டும் வெளியிடப்பட்டுள்ளது.

கதிர்காமம் முருகன் திருப்பள்ளியெழுச்சி
பொங்குநதி கங்கைதனில் சிரமேலணிந்த கைலை ஈசன் சிவ
மங்கை உமைக்கு இடப்பாகம் அளித்த நடராஜன் அருள்
கருணை மழை பொழியும் ஈழமணித்திருநாட்டில்
மங்களமாய் பொங்கிவரும் மாணிக்ககங்கை கரையில்
மங்காபுகழ் மிக்க மாணிக்க பிள்ளையாரே
காத்தருள்வாய்! காத்தருள்வாய்! காத்தருள்வாய்
கணபதியே காத்தருள் புரிவாய்!

ஓம் அரன் உமை மைந்தனே; அறு படை வீடடையானே!
அதிகாபதியே; அழகே பொருளே; அறிவே அழகனே முருகனே!
கதிர்காமத்தில் உறைபவனே; கதிரமலையானே!
அருணன் உதித்தனன் அகிலம் துயிலெழவே
கதிரமலை எங்கும் கதிரொளி வீசுது; கந்தனே
புள்ளினங்கள் எல்லாம் பூபாளம் பாடுது!
மாணிக்க கங்கையில் மணிதரளம்
பூரித்தே புரளுது புண்ணியனே, வடிவேலனே
கதிரமலையில் உறையும் கந்தனே எங்கள் தெய்வமே
திருப்பள்ளி எழுந்தருளாயே!

சரவணப் பொய்கையில் உதித்தவனே – சண்முகனே
கார்த்திகை பெண்களால் வளர்ந்தவனே கடம்பனே
சதுர்மறை புகழ்ந்திடும் சண்முக மாமருந்தே
சங்கரன் மைந்தனே கௌமார நாயகனே
ஆழிசூழ் இலங்கை அழகுதிருநகர் கண்டி
கதிர்காம வேலவனே கதிரமலையானே
குயில்கள் கூட்டமாய் கூடியே பாடிவர
குவளை மலர்களெல்லாம் இதழ் விரித்து கண்மலருது
கதிரமலையில் உறையும் கந்தனே எங்கள் தெய்வமே
திருப்பள்ளி எழுந்தருளாயே!

அருங்குணாபதமே அருணகிரியை காத்தவனே
ஆடிவேல் அழகனே ஆனைமுகன் தம்பியே
ஆதிசிவன் புத்திரனே இடுக்கண் களைபவனே
இன்பமெல்லாம் தருபவனே இமயவான் மைந்தனே
இகபரசுகம் தருபவனே இனிக்கும் தமிழ்த்தேனே
இருமையும் காப்பவனே ஈரேழுபுவனம் போற்றும்
எங்கள்குல தெய்வமே இணையில்லா பரம்பொருளே
தந்தைக்கு மந்திரம் உபதேசித்த குருநாதா
கதிரமலையில் உறையும் கந்தனே எங்கள் தெய்வமே
திருப்பள்ளி எழுந்தருளாயே!

ஆடும் மயிலேறி வருபவனே ஆண்டியாய் நின்றருள் புரிபவனே
இச்சாசக்தி, கிரியாசக்தி கொண்டவனே என்றும் இளைமையானவனே
முக்கண்ணனார் மைந்தனே மூவுலகையும் காப்பவனே
சச்சிதானந்தப் பரம்பொருளே சங்கடங்கள் தீர்ப்பவனே
சென்னிமலையானே சேவற்கொடியோனே
வஜ்ரவேலுடன் பச்சைமயில் வாகனத்தில் வலம் வருபவனே
மாணிக்க கங்கையில் மக்களெல்லாம் நீராடி கற்பூரச்சட்டியோடு
தூக்குக் காவடியோடு துதித்தே ஆடி வருகின்றார்
கதிரமலையில் உறையும் கந்தனே எங்கள் தெய்வமே
திருப்பள்ளி எழுந்தருளாயே!

அண்ணாமலையானின் மைந்தனே அங்கையில் தங்கவேல் கொண்டவனே
முத்துலிங்க சுவாமிகள் அட்சரத்தில் பதித்த ஆண்டியே
சுகுணவிலசனாய் சுந்தரவள்ளியோடு சுகிர்த்திடும் கதிரமலையானே
பால்குடி பாபா கெசபுரி சுவாமிக்கு அருள் செய்தவனே
கப்புறாளைமார் வாய்கட்டியே நெய்வேத்தியம் செய்திடும் கந்தனே
கால்நடையாய் வருவோரை காத்தருள் புரிந்திடும் வேலவனே
கண்கவர் களிறு காவடி மகளிர் மயில் நடன ஊர்வலத்தில்
'பெரஹரா' பெட்டகத்துள் அட்சரமாய் அமைந்த மறைஞான பொருளே
கதிரமலையில் உறையும் கந்தனே எங்கள் தெய்வமே
திருப்பள்ளி எழுந்தருளாயே!

(06ஆம் பக்கம் பார்க்க)

**மாத்தளை வடிவேலன்...**

# 'வானொலி மாமா' புகழ் நா. மகேசன் சிட்னியில் நேற்றுமுன்தினம் காலமானார்

**புலம்பெயர் தேசத்திலும் தமிழும் சைவமும் வளர்த்த பெருந்தகை**

குழந்தைகள் சுவையுடன் படிப்பதற்கு கதைப்பாடல்களே வெகுவாகத் துணைபுரியும். அமரர் மகேசன் இத்தகைய குழந்தை இலக்கியங்களை ஆக்கி எங்கள் நாட்டுக்குழந்தைகளின் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளார் என யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு கதைப்பாட்டிலும், ஆசிரியர் மகேசன் கதை கூற எடுத்துக் கொண்ட பொருள் ரசனையுடன் கையாளப்பட்டு, அதன் மூலமாக கூறவந்த போதனை தெளிவுடன் புலப்படுத்தப்பட்டுள்ளது. பாடற் சந்தம் பொருளுக்கும், சந்தர்ப்பத்துக்கு ஏற்றவகையில் அமைகின்றது. இவை யாவற்றுக்கும் மேலாக குழந்தைப் பாடல் ஆசிரியர் மகேசன் கையாளும் நாடகப் பண்பு இக்கதைப் பாட்டுகளில், குழந்தைகள் சுவையுடன் படிப்பதற்கு வெகுவாகத் துணைபுரியும். மகேசனின் இத்தகைய குழந்தை இலக்கியங்கள் எங்கள் நாட்டுக்குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளன. அதற்குரிய தகைமைகள் யாவும் அவரின் 'பாட்டும் கதையும்' நூல் அதற்கு நல்லதோர் ஆதாரம் என பேராசிரியர் அ. சண்முகதாஸ் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வானொலியில் 'சிறுவர் மலர்' என்ற 45நிமிடநேர நிகழ்ச்சி மூலம் 1965 முதல் தனது கலைப்பணியை ஆரம்பித்து, 1981 வரை தொடர்ந்து நடத்தி வந்தார். இதனால் இவர் 'வானொலி மாமா' என சிறுவர்களாலும் பெரியவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டார். சிறுவர் மலர் நிகழ்ச்சியில், சிறுவர்களுக்கான நாடகங்களை எழுதியும், நெறிப்படுத்தியும் வந்த வானொலி மாமா புகழ் நா. மகேசன் ஜூன் 22 ஆம் திகதி சிட்னியில் காலமானார்.

சிறுவயதில் நாம் வானொலியின் ஊடாக கேட்டு இரசித்த குரல், ஆற்றலும் அறிவும் கொண்ட அரிய ஆசானாக விளங்கியவர். சிறுவயதிலேயே இலங்கை வானொலியில் அவரால் தொகுத்து வழங்கப்படும் 'சிறுவர் நிகழ்ச்சியை' ரசித்து அனுபவித்தமை இன்னமும் பலருக்கு நினைவிருக்கும்.


இலங்கையின் சிறுவர் இலக்கிய வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்கும் மூத்ததலைமுறையினருக்கு இவரை நன்கு தெரியும். சமகாலத்தின் இளம் தலைமுறையினர் கூட இவரை நன்கு அறிந்திருப்பார்கள்

இவரது இயற்பெயர் நாகலிங்கம் மகேசன். அக்கால பள்ளி மாணவர்கள் இவரை வானொலி மாமா என்றே அழைத்தனர். சிறந்த முறையில் சிறுவர் மலர் நிகழ்ச்சியை நடத்தி வந்தவர். பிள்ளைக் கவியரசு அழ. வள்ளியப்பா போன்ற அறிஞர் பெருமக்களால் பாராட்டப்பட்ட இவர் சிட்னியில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்தவர்.

## சிட்னியில் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய அளப்பரிய பணி:

தமிழும் சைவமும் கண்ணென வாழ்ந்த வானொலி மாமா யாழ்மண் பெற்ற சிறந்த கல்விமான். சிட்னி சைவமன்றக் காவலர், கலைஞர், பழந்தமிழ் இலக்கிய விற்பன்னரும் கூட. அவுஸ்ரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடந்த பல ஆண்டுகள் அரிய நிகழ்சிகளை நடத்திய அறிஞர் நா.மகேசன் அவர்களாவார்.

வானொலி மாமா தமிழுக்கும், சிட்னி தமிழ் சமுகத்திற்கும் ஆற்றிய அளப்பரிய பணிக்கு தமிழ் சமுகம் என்றும் கடமைப் பட்டிருக்கிறது. அவர் ஆற்றிய உயரிய சேவைகளால், எம்மவர் மனங்களில் என்றும் வாழ்வார். அத்துடன் அவுஸ்திரேலியா – நியூசிலாந்து ஆகிய நாடுகளில் தமிழ் மாணவர்களுக்காக இவர் ஆற்றிய பணி அளப்பரியது.







சிட்னி முருகன் கோயில், சைவப் பாடசாலைகள், தமிழ்க் கல்வி நிலையங்கள், அவுஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மூலம் பல சமூகப் பணியாற்றினார். சிட்னி சைவர்களுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது.

பல வருடங்களாக சைவர்களின் இறுதிக்கிரியைகளை திருமுறைகள் பாராயணம் செய்து இதற்காக புத்தகம் தயாரித்து வெளியிட்டார். இது உலகளாவிய ரீதியில் பாவிக்கப்படுகின்றது.

சிட்னியில் தமிழ்ச் சமூகத்திற்கு அவர் ஆற்றி வரும் சேவையைப் பாராட்டி நியூ சவுத் வேல்ஸ் அரசு 2006 இல் அவருக்கு 'THE ACHIEVER' என்ற விருதை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்கான நூல்கள் எழுத வேண்டுமென்று கனவு கூடக் கண்டவனல்ல எனக் கூறும் நா. மகேசன், இன்று தெய்வாதீனமாக அப்படியான ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டவனாக இருக்கிறேன் என தனது 'பாட்டும் கதையும்' நூலின் என்னுரையில் எழுதியுள்ளார்.

மகேசன் மேலும் கூறுகையில், நமது நாட்டில் சிறுவர்களுக்கான நூல்கள் வெளிவருவது மிகக் குறைவு. புத்தகவெளியீட்டுத் தாபனங்களும் சிறுவர் இலக்கியங்களில் அதிகம் அக்கறை எடுப்பதும் இல்லை. ஊக்குவிப்பதும் இல்லை. இந்நிலையில் தனிப்பட்டவர்களின் முயற்சிகள் விருத்தியடைவதில்லை. நூல்களைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடுவது தனிப்பட்டவர்களுக்கு இயலாத கருமம். இருந்தாலும் இயன்றவரை சிறுவர் நூல்களைப் பயனுள்ளனவாகவும் சிறப்புடையனவாகவும் அமைக்க வேண்டும் என்பதே எனது ஆவல் என்று தெரிவித்துள்ளார்.

சிறுவர் நாடக விற்பன்னரான மகேசன் 1933 இல் பிறந்த இடம், யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு ஆகும். மேடை நாடக விற்பன்னரான அவர் பல பயனுள்ள நூல்களைப் படைத்தவர். வானொலி மாமா அவர்கள் நாகலிங்கம் சின்னம்மா தம்பதிகளுக்கு ஐந்தாவது மகவாகப் பிறந்தவர். அவர் இளவாலை சென் ஹென்றிஷ் கல்லூரியில் கல்வி பயின்றார். இலங்கை அரசாங்க கணக்காளர் சேவையில் கணக்காளராகப் பணிபுரிந்தவர்.

அவர் எழுதி வெளியிட்ட 'பாட்டும் கதையும்' என்னும் புத்தகம் சிறுவர் இலக்கியத் துறையில் நிலவும் தேவையினை ஒரளவு நிறைவேற்ற முற்படுகிறது. இதில் உள்ள பாட்டுகள் சிறுவர்களுக்கு மிகவும் ஏற்றவை. இவை மிகவும் இலகுவான சொற்களால் ஆனவை; எளிமையான ஒசை அமைப்புக் கொண்டவை. அத்துடன் சுவையான கதைகளையும் சொல்வனவாய் உள்ளவை என இ. முருகையன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## மகேசன் எழுதி வெளியிட்ட நூல்கள்:

குறளும் கதையும் (சிறுகதைகள், 1973), பாட்டும் கதையும் (கதைப்பாடல்கள், 1974), முனியன் முரளிகானன் (குறுநாவல், 1977), ஆத்திசூடி அறநெறிக் கதைகள் (1978), உடைந்த உள்ளம் (நாவல் 2 பாகங்கள், 1979), அவுஸ்திரேலியாவில் ஆத்திசூடி (சிறுவர் கதைத்தொகுதி 1991), திருமுறையும் திருக்கதையும் (தேவார விளக்கக் கதைகள், 1994), பாலர் நாடகங்கள் பத்து (1995), நாடகக் கவியரங்கு நாலு (சிறுவர் கவியரங்குத் தொகுதி, 1995), ஆறுமுகமான பொருள் (திருப்புகழ் விளக்கம், 1995), திருவிழா (சிறுவர் சைவ சமய நாவல், 1996), A Glimpse of Saiva Religion (சைவ சமய விளக்கம், 1996), சிறுவர் பாடல்கள் (அவுஸ்திரேலியப் பின்னணியில் சிறுவர் பாடல்கள் 1997), சைவசமய குரவர் போற்றி மாலை (போற்றித் துதி, 1998), சைவசமய இறுதிச் சடங்கு நடைமுறையும் விளக்கமும் (1998), சிட்னி முருகன் பிள்ளைத் தமிழ் (பிரபந்த நூல், 1999), ஒளவை வந்தால்.. (மாணவர் மேடை நாடகங்கள், 2001) ஆகியன நா. மகேசன் எழுதி வெளியிட்ட நூல்களாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# உலகநாடுகள் நெருக்கடியில் சிக்கித் தவிக்கையில் இந்திய பொருளாதாரம் பிரகாசமான நிலையில்!




## பிரதமர் நரேந்திர மோடியின் தலைமைத்துவத்துக்கு கிடைத்த வெற்றியென்று மக்கள் பாராட்டு!






உலகநாடுகள் அத்தனையுமே தற்போது பொருளாதார நெருக்கடியில் அவதியுறுகின்றன. ஆனால் இந்தியா மாத்திரம் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றது. உலக நாடுகளில் இந்தியா பொருளாதார வளர்ச்சியில் ஐந்தாவது பெரிய நாடாக இருக்கின்றது.

இந்தியாவின் அயல்நாடான பாகிஸ்தானும் தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கின்றது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைக் கண்டு பாகிஸ்தான் மக்களே வியக்கின்றனர்.

இந்நிலையில் உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் புதிய தகவலொன்றைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தற்போது பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்துள்ளதால், அந்நாட்டுடன் இணைந்திருப்பதற்கு பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் மக்கள் விரும்பவில்லை. எனவே பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பிரதேசமானது இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று வலுவான குரல்கள் எழுந்திருக்கின்றன என உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

"பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் (PoK) மக்கள் இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்க விரும்புகின்றனர். தற்போது பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது. அந்நாட்டுடன் இணைந்து நிற்க அவர்கள் விரும்பவில்லை" என்று யோகி ஆதித்யநாத் கூறினார்.

"நரேந்திர மோடி மீண்டும் பிரதமராவார் என்பது உறுதியாகி விட்டது. உலகம் முழுவதும் தற்போது நெருக்கடியில் இருக்கிறது. ஆனால் இந்தியா மட்டும் பிரகாசமாக இருக்கிறது. நெருக்கடிகளிலிருந்து மக்களை காக்கும் நாயகனாக மோடி உருவெடுத்திருக்கிறார். இந்திய நாட்டில் சுமார் 80 கோடி மக்களுக்கு ரேஷன் பொருட்கள் கிடைக்கின்றன. ஆனால் பாகிஸ்தானில் இரண்டு வேளை உணவு என்பதே பெரிய சவாலாக இருக்கிறது. பா.ஜ.க ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அதாவது கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் சுமார் 115 மாவட்டங்களில் நக்சல்கள் பரவியிருந்தனர். ஆனால் இது தற்போது 34 மாவட்டங்களுக்குள் சுருங்கியுள்ளது. இதற்குக் காரணம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் தான்" என்று யோகி மேலும் கூறியுள்ளார்.

### இந்தியாவின் ஆயுத ஏற்றுமதி வருமானம் வேகமாக அதிகரிப்பு

இது ஒருபுறமிருக்க, இந்தியா நீண்ட காலமாக ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடாக மட்டுமே இருந்து வருகிறது. அதிலும் குறிப்பாக இந்தியா ரஷ்யாவிடம் இருந்து அதிகப்படியான ஆயுதங்களை வாங்குகிறது. இந்தியா மற்றும் ரஷ்யா நாடுகளுக்கிடையே பல பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுத ஒப்பந்தங்கள் நிலுவையில் இருக்கும் இவ்வேளையில், ரஷ்யா _ உக்ரைன் போர் மூலம் ஆயுதங்கள், முக்கிய உபகரணங்களின் இறக்குமதி தாமதமாகி வருகிறது.

இந்தியா தனக்குத் தேவையான ஆயுதங்களை அதிகப்படியாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்தாலும், அதாவது ஆயுத வர்த்தகத்தில் இறக்குமதி மட்டுமே செய்து வந்த இந்தியா தற்போது ஏற்றுமதி செய்யவும் தொடங்கியுள்ளது. இது மட்டும் இல்லாமல் உலக நாடுகளில் ஆயுத ஏற்றுமதியில் வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் பட்டியலிலும் இந்தியா தற்போது இடம்பிடித்துக் கொண்டுள்ளது.

### பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதியாக இருப்பதே அங்குள்ள மக்களின் விருப்பம்!

இந்தியாவின் ஆயுத ஏற்றுமதியிலும், உற்பத்தியிலும் முக்கிய அங்கமாக பிரம்மோஸ் (BrahMos) ஏவுகணை விளங்குகிறது. 1998 ஆம் ஆண்டு இந்தியா _ ரஷ்யா அரசாங்கங்களுக்கிடையிலான கூட்டணியில் உருவாக்கப்பட்ட BrahMos Aerospace நிறுவனம் BrahMos ஏவுகணையை தயாரித்து வருகின்றது. இந்நிறுவனம் இந்திய அரசின் DRDO மற்றும் ரஷ்யாவின் NPO Mashinostroyenia கூட்டணியில் உருவானது. BrahMos ஏவுகணையின் முதல் சோதனை 2001 இல் செய்யப்பட்டு, அடுத்த சில வருடத்தில் இந்திய கப்பல் படை, விமானப் படை, இராணுவத்தில் சேர்க்கப்பட்டது. இதேசமயம் உக்ரைன் மீதான போரின் காரணமாக மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது விதித்த தடை மூலம் BrahMos ஏவுகணையின் உற்பத்தி, வடிவமைப்பு, திட்டமிடல் போன்ற எதிலும் பாதிப்பு இருக்காது. BrahMos ஏவுகணை தயாரிப்பின் ஆரம்பக்கட்டத்தில் வெறும் 15 சதவீத உதிரிப்பாகங்கள் மட்டுமே இந்தியாவில் தயாரிக்கப்பட்டன. தற்போது இது 70 சதவீதமாக உயர்ந்துள்ளது. 30 சதவீத பொருட்களுக்கு ரஷ்யாவை நம்பியிருந்தாலும், இது சமாளிக்கக் கூடிய வகையில்தான் உள்ளது.

இதேவேளையில் BrahMos ஏவுகணையை BrahMos Aerospace நிறுவனம் பல வகையில் மேம்படுத்தி மிகவும் திறனுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் மாற்றி வருகிறது. இந்த நிலையில் BrahMos ஏவுகணையை கண்டு சில நாடுகள் வியந்து வாங்க முன்வந்துள்ளன. கடந்த வருடம் பிலிப்பைன்ஸ் இந்திய அரசுடன் 375 மில்லியன் டொலர் மதிப்பிலான BrahMos ஏவுகணைகளை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இதைத் தொடர்ந்து இந்தோனேஷியாவுக்கு 200 மில்லியன் டொலர் ஏவுகணையை விற்பனை செய்வதற்கான பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது. தற்போது வியட்நாம் அரசு 625 மில்லியன் டொலர் மதிப்பிலான BrahMos ஏவுகணையை வாங்குவதற்கான பேச்சுவார்த்தை துவங்கியுள்ளது. அடுத்தடுத்து மூன்று நாடுகளுடனான ஆயுத ஒப்பந்தம் பெரும் நம்பிக்கையை இந்திய பாதுகாப்புத் துறையில் ஏற்படுத்தியுள்ளது.

2016_17 இல் இந்தியாவின் ஆயுத ஏற்றுமதி வெறும் 1,521 கோடி ரூபாயாக இருந்த நிலையில், 2022_ 23 ஆம் நிதியாண்டில் 15,920 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. 2024_ 25 ஆம் நிதியாண்டில் இந்திய பாதுகாப்பு ஏற்றுமதி 35000 கோடி ரூபா அளவீட்டை தொடும் நிலையில் உள்ளது.

**எஸ். சாரங்கன்...**

---

# ஆயிரம் வேல்கள் தாங்கிய அடியார்களுடன் கதிர்காமம் திருத்தல வேல்யாத்திரை நிறைவு

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் கந்தன் ஆலய ஆடிவேல் விழா உற்சவத்திற்காக வரலாற்றில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்ட ஆயிரம் வேல்கள் தாங்கிய அடியார்களுடனான மாபெரும் வேல்யாத்திரை வெற்றிகரமாக நிறைவடைந்தது.

1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை வரலாற்றில் முதல் தடவையாக கடந்த (14) புதன்கிழமை பி.ப. இரண்டு மணியளவில் உகந்தைமலை முருகன் ஆலயத்தில் இருந்து சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் ஆரம்பமாகியது.

வேலோடுமலை முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தா முருகஸ்ரீ தியாகராஜா ஆசிரியர் வேல்சாமியாக இருந்து இவ்வருடம் முதல் யாத்திரையை தலைமையேற்று நடத்தினார். திருமூலர் பெருமானின் அருளாசியுடன், சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழிகாட்டலின் கீழ் இவ்வருடத்தில் இருந்து 1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரையாக, கதிர்காமம் நோக்கி கந்தனை தரிசிக்க வேலோடு மலையில் இருந்துஅரோஹரா கோசம் விண்ணைப் பிளக்க, பாத யாத்திரை அமிர்தகழி மாமாங்க பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்து அங்கிருந்து, உகந்தை முருகன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து மீண்டும் ஆரம்பமாகியது.

பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்ட ஆறு நாட்களிலும் யாத்திரிகர்கள் அனைவருக்கும் மூன்று வேளை சாத்வீக உணவும், இரண்டு வேளை தேநீரும் இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுமார் 1500 யாத்திரிகர்கள் பயன்பெற்றனர். சித்தர்கள் குரல் அமைப்பின் நளபாகச் சக்கரவர்த்தி மதியண்ணா தலைமையிலான குழுவினர் சிறப்பாக செயற்பட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது.

அனைத்து ஏற்பாடுகளும் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத்தலைவர் மனோகரன் ஆகியோரின் நேரடி ஏற்பாட்டின் கீழ் வெற்றிகரமாக நடைபெற்றன. தினமும் தரித்து நின்ற ஒவ்வொரு இடங்களிலும், சக்தி வாய்ந்த வேல் பூஜை, சித்தர்கள் வேள்வி,வன பூஜை, வன போஜனம், மூலிகை குளியல், கூட்டு வழிபாடுகள், தியானங்கள், திருப்புகழ் பாராயணங்கள் இடம்பெற்றன.

அனைத்து வேல் அடியார்களும் காவி வஸ்திரங்கள் தரித்து அணிவகுத்து சென்றமை பக்திப் பரவசத்தை ஊட்டியது. இவை அனைத்தையும் சித்தர்கள் குரல் அமைப்பின் படப்பிடிப்பாளர் வீரமுனை கஸ்தூரன் தத்ரூபமாக படமாக்கியிருந்தார்.



கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பாதயாத்திரையை ஆரம்பித்த பக்தர்கள் கதிர்காம திருத்தலத்தை அடைந்து வருகின்றனர்.

பாதயாத்திரையானது குமண வன பறவைகள் சரணாலய காட்டுவழி பாதையூடாக ஆரம்பிக்கப்பட்டு 6 நாட்களில் 18 யாக பூசை உள்ளிட்ட புனித கங்கைகளின் அபிஷேகங்களுடன் இடம்பெற்றது.

ஆஸ்தான குரு சிவசங்கர் ஜீ தலைமையில் நமசிவாய சுவாமியின் பங்கேற்றலுடன் சிவாகம முறைப்படி அனைத்து சிறப்பு பூஜைகளும் மிக பிரமாண்டமாக இடம்பெற்றன. தினமும் நடுநிசி 12 மணிக்கு விசேடயாகம் நடுக்காட்டில் ஆறு இடங்களிலும் நடைபெற்றமை பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.

குறித்த யாத்திரையின் போது தாம் கந்தனை உணர்ந்ததாக யாத்திரிகர்கள் பக்தி பரவசத்துடன் தெரிவித்திருந்தனர். கதிர்காமத் திருத்தலத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலில் கடந்த திங்கட்கிழமை(19) திகதி மாலை 5.00 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்றது.

சர்வமத தலைவர்கள், கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர உள்ளிட்ட அதிகளவிலான பக்தர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர். கதிர்காமக் கந்தனின் வருடாந்த ஆடிவேல் திருவிழாவில் இந்த ஆண்டுக்கான முதலாவது திருவீதி உலா( பெரஹறா) கடந்த 19 திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜுலை மாதம் 4 ஆம் திகதி மாணிக்க கங்கையில் நடைபெறவுள்ள நீர் வெட்டும் நிகழ்வுடன் நிறைவு பெறவுள்ளது.







விபுலமாமணி
**வி.ரி.சகாதேவராஜா...**
ஆலோசகர் சித்தர்கள் குரல் சமஸ்தானம்

---

# திருமலை வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பு



இலங்கையின் புகழ்பெற்ற, மற்றும் 120 வருடங்களுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்ட துரித உணவு உணவகச் சங்கிலியான பெரேரா & சன்ஸ் பேக்கர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (P&S) நிறுவனம் இலங்கை கடற்படையுடன் இணைந்து, தனது மனு மெஹெவர முயற்சியின் கீழ் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அதிநவீன ரிவர்ஸ் ஓஸ்மோசிஸ் (Reverse Osmosis/ RO) பிரிவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்தப் பங்களிப்பானது மருத்துவமனையின் நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

1940 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட திருகோணமலை மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு தினமும் சுமார் 2,000 நோயாளிகள் வந்து செல்வதால் சுத்தமான தண்ணீர் இவர்களுக்கு கிடைப்பது மிக முக்கியமானது. இதனடிப்படையில், புதிய RO பிரிவானது இவ்வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் (OPD) நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் மருத்துவமனையில் உள்ள அனைவரும் பயனடைவார்கள்.

இந்த முயற்சி தொடர்பாக கருத்துத் தெரிவித்த பெரேரா மற்றும் சன்ஸ் பேக்கர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிஹான் பெரேரா, “மனு மெஹெவர முயற்சி போன்ற பாரிய முயற்சியை மேற்கொள்ள எமது ஊழியர்கள் காட்டிய திடமான அர்ப்பணிப்புக்காக நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எமது ஊழியர்களின் ஆதரவு மற்றும் இலங்கை கடற்படையின் விலைமதிப்பற்ற உதவி ஆகியவை, நமக்கு ஆதரவளித்த மக்களுக்கு நாம் மீண்டும் கொடுப்பதற்கு பாரிய உதவியாக அமைந்தன. நாம் ஒன்றாக, கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் சமூக நலன் ஆகியவற்றில் வெற்றிகரமான CSR திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம்" என்றார்.

இத்திட்டமானது திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு P&S வழங்கிய இரண்டாவது RO பிரிவாக அமைகின்றது. இதன் மூலம் மக்களுக்கு சுத்தமான தண்ணீருக்கான அணுகலை மேலும் எளிதாக்கியுள்ளது.



---

# நெறிமுறைகளைக் கடைப்பிடித்தவாறு சமூக ஊடகங்களில் கருத்துப் பகிர்தல்





சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பகிரும்போது ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பான பயிற்சிப் பட்டறை அண்மையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள மாளிகைக்காட்டில் நடைபெற்றது. பெண்களின் மேம்பாட்டுக்காக பணியாற்றும் இலங்கை முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி ஏற்பாட்டில் சுவீடனை தலைமையகமாக கொண்ட சர்வதேச தொண்டு நிறுவனமான டயகோனியா அனுசரனையில் 'சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பகிரும் போது ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் ஒன்றிணைதல்' எனும் தொனிப்பொருளில் தமிழ்மொழி மூல ஒரு நாள் பயிற்சிப் பட்டறை மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

## மாளிகைக்காட்டில் பயிற்சிப்பட்டறை



அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சமூகம், சமயம், அரசியல் மற்றும் ஏனைய விடயங்களில் சமூக ஊடகங்களில் தங்களது ஆக்கங்களை பகிர்ந்துவரும் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் என பல்லின ஆண்கள் பெண்கள் பங்குபற்றுனர்களாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியான நிகழ்வுகளில் வளவாளராக பணியாற்றும் கலாநிதி எம்.சி.றஸ்மின் வளவாளராகவும், விடிவெள்ளி பத்திரிகை ஆசிரியர் எம்.பி.எம்.பைறூஸ் துணை வளவாளராகவும் கலந்து பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்வுக்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா தலைமை தாங்கினார்.

கருத்து வேற்றுமை, தனியுரிமை, பரபரப்பு, அநாமதேய தகவல் மூலங்கள், சமூக ஊடகம் மற்றும் உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை மையமாக வைத்து இதன்போது வளவாளரால் விளக்கமளிக்கப்பட்டது. மேலும், சமூக ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகம் போன்றவற்றின் நெறிமுறைகள் குறித்ததான விரிவான விடயங்கள் ஆராயப்பட்டதுடன், மேற்படி நெறிமுறைகள் தொடர்பில் பங்குபற்றியோரிடமிருந்து கருந்துகள் பெறப்பட்டு எதிர்காலத்தில் பிராந்திய ரீதியாக ஊடக நெறிமுறைகளை ஊக்குவிக்கும் செயற்திட்டமும் வரையப்பட்டது.

தவறான தகவல், பரபரப்பு தகவல், புனைதல், போலியான தகவல், சரிபார்ப்பு இல்லாமை, தகவல்களை உறுதிப்படுத்தாமை, வெறுக்கத்தக்க பேச்சுகளைப் பரப்புதல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் இன்னோரன்ன விடயதானங்களை நோக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் நெறிமுறை உட்குறிப்பு, ஊடக நெறிமுறையில் வித்தியாசமான அணுகுமுறைகளைக் கையாளுதல், நெறிமுறையைப் பின்பற்றுவதில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் மற்றும் அதற்கு முன்னோக்கியதான பாதை அத்துடன் எதிர்காலத்திற்கான சிபாரிசுகள் போன்ற விடயங்களில் பங்குபற்றுனர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டன.

அவை குறித்து விரிவாகப் பேசப்பட்ட சிறப்பான ஊடக நெறிமுறை தொடர்பான பயிற்சி பட்டறையாக இது அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அம்பாறை மாவட்டத்தில் இப்பயிற்சி பட்டறையை நடத்துவதற்கான ஏற்பாட்டை சமூக அபிவிருத்தி மன்றம் முன்னெடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்...**

## இ.தொ.கா. பலம் மிக்க... 03ஆம் பக்கத் தொடர்

பின்னர், நாட்டில் கொரோனா பரவல் சூழ்நிலை உருவானது. அதன்போது, அவர் உரிய வகையில் கவனிக்கப்படவில்லை.

அந்த வகையில், ஒருவர் நம்முடன் இருக்கும் போது அதன் பெறுமதி தெரியாது. அவரை இழக்கும் போதே அந்த இழப்பின் பெறுமதி எமக்கு தெரிகிறது. முத்து சிவலிங்கத்தை பொறுத்தவரையில் அவரை போன்ற ஒரு அரசியல்வாதியை மலையகத்தில் பார்க்கவும் முடியாது. மீண்டும் உருவாக்கவும் முடியாது என்பதே எனது கருத்து. ஏனென்றால், தலைமைத்துவத்துக்கு சிறந்த முன்னுதாரணமாகவும் தனித்துவமான அடையாளமாகவும் அவர் திகழ்ந்தார்.

எனக்கும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் வரும்போதெல்லாம், எமக்கு மத்தியிலிருந்து சமரசம் செய்து வைத்தவர் முத்து சிவலிங்கமே.

பலரும் ஆறுமுகம் தொண்டமானின் முதுகில் குத்தி விட்டு அல்லது காட்டிக்கொடுத்து விட்டு கட்சியிலிருந்து வெளியேறிச் சென்ற நிலையிலும், கட்சியோடு இருந்து அவருக்கு தோளோடு தோள் நின்று கட்சிக்கும் அவருக்கும் பலம் சேர்த்தவராக நாம் முத்து சிவலிங்கத்தை பெருமையுடன் குறிப்பிட முடியும். அந்த வகையில், இருபெரும் தலைவர்களை மலையகம் இழந்துள்ளது" என்றார்.

## இந்தியா-அமெரிக்க... 03ஆம் பக்கத் தொடர்

உறவுகளின் பல்வேறு அம்சங்களை மதிப்பாய்வு செய்ததுடன், எமது மக்களின் அமைதி, செழிப்பு மற்றும் உலகளாவிய நன்மைக்காக அவற்றை மேலும் ஆழப்படுத்துவதற்கான வழிகள் தொடர்பாக விவாதித்துள்ளனர்.

## இலங்கை 'வானொலி... 03ஆம் பக்கத் தொடர்

'சான்றோர் விருது' வழங்கிக் கௌரவித்தது. சிட்னி முருகன் ஆலயத்துக்கு இவர் ஆற்றிய பணி மகத்தானது. சைவமன்றத்தின் தலைவராக இருந்து வழிநடத்தியவரென்பது குறிப்பிடத்தக்கது.

## மதிப்பீடுகளை... 03ஆம் பக்கத் தொடர்

தலைவர் சபையில் குறிப்பிட்டார். எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிடுவது போல், மதிப்பீட்டு நடவடிக்கைகளில் குறைபாடுகள் காணப்படுமாயின், தனியான திணைக்களமொன்றை ஏற்படுத்தி, அதனூடாக அதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியும்" என்றார்.

## 30 வீதமானோர்... 03ஆம் பக்கத் தொடர்

முன்வைத்து உரையாற்றிய போதே, பதில் நிதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

"பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் வெளிப்படைத்தன்மையுடனேயே முன்னெடுக்கப்படும். சர்வதேச நிதி நிறுவனங்களும் இது தொடர்பாக வலியுறுத்தியுள்ளன. அஸ்வெசும நிவாரணத் திட்டம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகிறது.

சமுர்த்திப் பயனாளிகளில் 30 சதவீதத்துக்கும் அதிகமானோர் நிவாரணங்களை பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவர்களென தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மதிப்பீடுகள் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கை அகதி ஒருவர்... 03ஆம் பக்கத் தொடர்

நடைமுறைகள் முடிந்து, சொந்த நாட்டுக்கு செல்லும்வரை இந்த சிறப்பு முகாமிலேயே இருக்க வேண்டும்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ் ஆகியோரும் இந்த சிறப்பு முகாமிலேயே அடைக்கப்பட்டிருந்தனர்.

இதற்கிடையில் வழக்குகளிலிருந்து விடுதலையான இலங்கைத் தமிழர்கள் சிலர் தம்மை சிறப்பு முகாமிலிருந்து விடுவிக்குமாறு கோரியும் சொந்த நாட்டுக்கு அனுப்புமாறு கோரியும் அவ்வப்போது இங்கு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கையைச் சேர்ந்த தமிழரான சுகந்தன் (வயது 35), தன்னை சிறப்பு முகாமிலிருந்து விடுவிக்குமாறு கோரி கடந்த 19ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். ஐந்தாவது நாளாக நேற்று வெள்ளிக்கிழமையும் அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவரிடம் வருவாய்த்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை முடிந்து விடுதலை செய்யப்பட்டு, அகதிகள் சிறப்பு முகாமிலுள்ள ஜெயக்குமாருக்கு திருச்சி அரசு மருத்துவமனையில் அண்மையில் கண்ணில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடா்ந்து கண் மருத்துவ பரிசோதனைக்காக ஜெயக்குமார் திருச்சி அரசு மருத்துவமனைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கடந்த புதன்கிழமை அழைத்துச் செல்லப்பட்டு, பரிசோதனை முடிந்ததும், மீண்டும் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டார்.

## ஜூலை இறுதியில்... 03ஆம் பக்கத் தொடர்

மதிப்பீட்டுப் பணி தற்போது 37 பாடசாலைகளில் நடைபெற்று வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

## தொன்மையும்... (04ஆம் பக்கத் தொடர்)

குன்றுதோறும் நின்று குவலயம் காப்பவனே
சந்தப்பாடல்களிலே சன்னதம் புரிந்திடும் வேலா
பிள்ளைத்தமிழ் பாடும் பாவலர் நாவில் உறைபவனே
கார் சேரும் சோலைக்கதிர் வேலாயுதனே
பார் போற்றித் ததிக்கும் பார்வதி மைந்தனே
சீர்பெற்ற செல்லக்கதிர்காமத்தில் வேடனாய் வந்தவனே
கருணைகூர் முகங்கள் ஆறு கொண்டவனே
கரங்கள் பன்னிரெண்டும் உடையவனே
கதிரமலையில் உறையும் கந்தனே எங்கள் தெய்வமே
திருப்பள்ளி எழுந்தருளாயே!

தரணியில் ஆண்டியாய் நின்றவனே தணிகைமலைக்குகனே
திருச்செந்தூர்ப்பதியில் எழுந்து திசையெங்கும் காத்திடும் வேலவா
பழமுதிர்ச்சோலையிலே ஞானப்பழமாய் நின்ற பரம்பொருளே
திருப்பரங்குன்றத்திலமர்ந்த திருப்புகழ் செவ்வேலழகா
பத்துமலை முருகா பாரெங்கும் கோயில் கொண்ட பராசக்தி மைந்தா
கந்தக்கோட்ட காவலா கதிர்வேலை கையிலேந்தி காத்திடும் வேலா
பாசறை வீடமைத்த பதி கதிர்காமத்துறை வேலா
கானகக் குறப்பெண்கள் கன்னிப்புனத்து தேனும் திணைமாவும் கொண்டே
வள்ளி மணவாளா உனைத்தொழ வரிசையாய் நிற்கின்றார்
கடம்பமரமெல்லாம் கமழும் பூக்கள் பூத்தே நறுமணம் வீசுது
கதிரமலையில் உறையும் கந்தனே எங்கள் தெய்வமே
திருப்பள்ளி எழுந்தருளாயே!

செந்தாமரை மலர்களும், செங்கழுநீர் மலர்களும்
வந்தனம் செய்தே வரவேற்கின்றன
சிந்தாமணியே கதிரமலையிலமர்ந்த கந்தனே
இந்திரனும், சந்திரனும், மெஞ்ஞான விண்ணவரும்
வந்தே உனைத் தொழுதிட
பழங்கள், பவளத்தட்டுடன் சீர்வரிசை செய்திடவே
சுந்தரவடிவேலா சூரியன் குணதிசையில் எழுந்திட
சிந்தையில் உனை நினைத்து தொழுதுய்ய
கதிரமலையில் உறையும் கந்தனே எங்கள் தெய்வமே
திருப்பள்ளி எழுந்தருளாயே!

கேட்டவர்க்கு கேட்டவரம் தந்து உன்மீது
தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் பாடிய பாவலர்க்கு
மும்மலம் நீக்கியே மோட்சகதி அருளியவனே
தீநெறியில் திரிந்த அருணகிரிநாதருக்கு நல்வழிகாட்டி
முத்தைத்தரு பத்தித்திருநகை என திருப்புகழ் பாட வழிகொடுத்தும்
அம்மானை, ஆனந்தக்களிப்பு, கிளித்தூது, கும்மி
பாட அடியார்க்கு அருளியவனே
அகவல், காதற்கன்னி, பாவினங்கள் உனைப் புகழ்ந்திடவே
கதிரமலை உறையும் கந்தனே எங்கள் தெய்வமே
திருப்பள்ளி எழுந்தருளாயே!

கதிரமலைப்பள்ளு, வள்ளைப்பாடும் கிளிகள் சூழ
மஞ்ஞை மகிழ்ந்தே தோகை விரித்தாடிட
கடம்பமாலை அணிந்தவனே தௌ;ளமுதே சிவஞான சோதியே
கயல்மீன்கள் துள்ளிப்பாயும் மாணிக்க கங்கையில்
இருளகற்றும் மாணிக்க மணிகள் மின்னிட
கஸ்தூரி மான்கள் உலாவிடும் கதிரமலை எழுந்தவனே
சூரனை இருகூராக்கி வேலும் மயிலுமாக ஆட்கொண்டவனே
கவரி மான்களும், காமதேனுவும் உறைவிடமான கதிரமலையானே
கறையானுக்கிளையோனே கதிர்காம பெருமானே
எங்கள் தெய்வமே திருப்பள்ளி எழுந்தருளாயே!
எங்கள் தெய்வமே திருப்பள்ளி எழுந்தருளாயே!
கதிர்காமம் முருகன் துணை!

## கொழும்பில் இன்று...

நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அவசர திருத்தப்பணிகள் காரணமாக நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை அறிவித்துள்ளது.

## பல்கலை மாணவர்களுக்கு ...

தொடர்வதற்காக வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது.

அந்த வகையில், மேற்படி வட்டியில்லாக் கடன் தொடர்பாக ஏற்கெனவே கல்வியமைச்சரால் அமைச்சரவைக்கு அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதற்கிணங்க, தற்போது நிதி ஒதுக்கீடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், இந்தத் திட்டத்தை விரைவாக மேற்காள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருகிறது. நான் கல்வி அமைச்சராக இருந்த குறுகிய காலத்தில் தனியார் பல்கலைக்கழகங்கள் பலவற்றுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் நிதி வழங்க நாம் நடவடிக்கை எடுத்தோம்.

கடன் வழங்குவதற்கான எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் நடவடிக்கை எடுத்துள்ளமையை குறிப்பிட வேண்டும்.

அதற்கிணங்க, தற்போதுள்ள நிதி பிரச்சினையை முகாமைத்துவம் செய்து அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமன்றி, தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வட்டியில்லாக் கடன் வசதியை பெற்றுக்கொடுக்க மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

## இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே...

தினேஷ் குணவர்த்தனவை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் (22) சந்தித்த போது, பொருளாதார ஒத்துழைப்புக்கான உத்தேச செயல் திட்டம் தொடர்பாக கேட்டறிந்தார்.

சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் இரு நாடுகளுக்குமிடையிலான விமான சேவைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென, இந்திய உயர்ஸ்தானிகர் இதன்போது தெரிவித்தார். அரசாங்கத்துறை போன்று தனியார் விமான நிறுவனங்கள் இலங்கையில் விமானங்களை இயக்க தயாராகவிருப்பதாக, அவர் சுட்டிக்காட்டினார். அலையன்ஸ் எயார் தனது நடவடிக்கைகளை அதிகரிக்க விரும்புவதாக தெரிவித்த உயர்ஸ்தானிகர், தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விமான சேவையை நடத்துவது போன்று, இரத்மலானை விமான நிலையம்வரை அதன் சேவைகளை நீடிக்க விரும்புவதாகவும் தெரிவித்தார். இதேவேளை டிஜிட்டல் மயமாக்கல், மாற்று எரிசக்தி மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் இந்திய முதலீடுகளை அதிகரிக்க பிரதமர் அழைப்பு விடுத்தார். இலங்கையின் கடனை தக்கவைக்க கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி உத்தரவாதங்கள் தேவைப்படும். பொருளாதார நெருக்கடியின் போது பொருத்தமான IMF திட்டத்தை பெறுவதற்கு இலங்கைக்கு ஆதரவளித்தமைக்காக இந்தியாவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பிரதமரின் மேலதிக செயலாளர் தீபா லியனகே, ஊடக ஆலோசகர் சுகீஸ்வர சேனாதிர, இந்திய உயர்ஸ்தானிகராலய ஆலோசகர் எல்டஸ் மேத்யூஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## அம்பாறையிலிருந்து சைக்கிளில்...

பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்திலிருந்து நேற்று 10 வயதுடைய இச்சிறுவன், தனது தாய்க்கு தெரியாமல் வீட்டை விட்டு அதிகாலை வேளையில் சென்றுள்ளான். வீட்டை விட்டுச் சென்ற சிறுவன், சைக்கிளொன்றை பெற்று, அக்கரைப்பற்று நகருக்கு சென்று, பின்னர் பஸ்ஸில் கல்முனை பிரதேசத்துக்கு வந்து தனியாக நடமாடி திரிந்துள்ளான்.

இவ்வாறு தனியாக ஒரு சிறுவன் பெரிய பாடசாலை பையுடன் சந்தேகத்துக்கிடமாக நடமாடுவதை அவதானித்த முச்சக்கரவண்டி சாரதியொருவர், இது தொடர்பாக கல்முனை தலைமையக பொலிஸாருக்கு அறிவித்தார்.

இத்தகவலுக்கமைய விரைந்து செயற்பட்ட பொலிஸ் குழுவினர், சிறுவனை மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தனர்.

இதன்போது அச்சிறுவன், தனது தந்தை கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரிவதாகவும் அவரை பார்ப்பதற்கு சைக்கிளில் கொழும்புக்கு செல்வதற்கு தயாரானதாகவும் தெரிவித்தான்.

உடனடியாக சிறுவனிடம் தகவல்களை பெற்ற பொலிஸார், சிறுவனின் தாயை அழைத்து சிறுவனை ஒப்படைத்ததுடன், சிறுவனுக்கு அறிவுரையும் வழங்கினர்.

இவ்விடயம் தொடர்பாக சிறுவனின் தாயும், தனது மகனை மிக அக்கறையுடன் பார்த்துக்கொள்வதாக பொலிஸார் முன்னிலையில் தெரிவித்தார். அண்மைக்காலமாக நாட்டில் சிறுவர்கள் தொடர்பாக பல்வேறு செய்திகள் வெளியாகியதையடுத்து, பெற்றோர் தத்தமது பிள்ளைகளை அக்கறையுடன் கண்காணிக்க வேண்டுமென, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் தெரிவித்தார்.

## குமார் குணரட்ணத்தின்...

கொழும்பில் கடந்தாண்டு இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தங்களை கைது செய்து தடுத்து வைத்ததன் மூலம் தங்களது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக கோரி அவர்கள் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்கள், நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன மற்றும் ஜனக்க டி சில்வா ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுக்கப்பட்டது. இதன்போது, இம்மனுக்களை அடுத்தாண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## DIG தென்னகோனின் ரிட்மனு ...

பிரவேசித்த போது, ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் கண்டுபிடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக தமக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டை இரத்துச் செய்யுமாறு கோரி தேசபந்து தென்னகோன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த தீர்ப்பு நேற்று வெள்ளிக்கிழமை (23) அறிவிக்கப்படவிருந்த போதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், நீதிபதி நிஸ்சங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாம், இது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படுமென தெரிவித்துள்ளது.

## டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலில்...

பேரழிவு வெடிப்பு இடம்பெற்றிருக்கலாமென்று கருதக்கூடிய விதத்தில் காணப்படுவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

டைட்டன் நீர்மூழ்கி காணாமல்போன சில நிமிடங்களிலேயே அமெரிக்க கடற்படை, ஒரு வெடிப்பெனக் கருதக்கூடிய ஒலியை உணர்ந்ததாகவும், அவர் தெரிவித்துள்ளார். டைட்டானிக் சிதைவுகளை பார்வையிடுவதற்கு ஐந்து பேரை ஏற்றிக்கொண்டு சென்ற டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

## பொதுப்பயன்பாடுகள் ...

நியமிக்கப்பட்ட பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ நேற்று வெள்ளிக்கிழமை (23) உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். மே மாதம் பதவி நீக்கப்பட்ட முன்னாள் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் ஜனக ரத்நாயக்கவுக்கு எதிரான பாராளுமன்ற பிரேரணை முன்வைக்கப்பட்டது. ரத்நாயக்க மற்றும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர ஆகியோருக்கிடையில் மின்சாரக் கட்டணத் திருத்தம் மற்றும் மின்வெட்டு காலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக பல வாக்குவாதங்கள் இடம்பெற்றதை அடுத்து இந்த பிரேரணை முன்வைக்கப்பட்டது.

## இலங்கையின் மறுசீரமைப்புக்கு...

நிதி மற்றும் கடன் வழங்கல் மூலம் இலங்கையின் நிலையான அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்கா வழங்கி வருகின்ற ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, திறைசேரியின் செயலாளர் என்ற வகையில் யெலன் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய அமெரிக்க திறைசேரியின் செயலாளருக்கு விளக்கமளித்தார். கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் சவாலானதாக அமைந்திருந்தாலும், புரிந்துணர்வுடன் முன்னோக்கி செல்வதற்கு முயற்சிப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இருதரப்பு கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் ஜெனட் யெலனுக்கு தெளிவுபடுத்தினார். இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் 'காலநிலை சுபீட்சத்துக்கான திட்டமிடல்' தொடர்பாகவும் இத்திட்டங்களுக்கு தனியார் துறையின் உதவியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக் கொள்வது தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டதுடன், எதிர்வரும் தினமொன்றில் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் செயலாளருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

## இந்திய வீடமைப்புத்திட்டம்...

பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

விரைவில் இந்திய வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே, அதற்கு முன்னதாக ஏற்கெனவே பூர்த்தி செய்யப்படாமலுள்ள குடியிருப்புகள் முழுமையாக்கி மக்களிடம் கையளிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு கொட்டகலை விருந்தகமொன்றில் அண்மையில் நடைபெற்ற போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தொடர்ந்து தெரிவித்த போது,

"மலையகத்துக்கான நகர பல்கலைக்கழகமொன்றை ஆரம்பிக்க தேவையான கட்டட வசதிகளுள்ளதுடன், அதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மலையகத்தின் அபிவிருத்தி தொடர்பாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சகல தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேசி கருத்துகளை பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர்களின் நலன் கருதி, அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஹற்றன் பிரதேசத்தில் 'ஊடக மையம்' அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

"நீண்டகாலத்துக்கு பின்னர் நுவரெலியா மாவட்டத்திலுள்ள சகல ஊடகவியலாளர்களையும் ஒரேநேரத்தில் சந்திப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. இது தேர்தலுக்காகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ ஏற்படுத்தப்பட்டுள்ள சந்திப்பல்ல.

நாம் அரசியல் ரீதியில் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்கள் சரியான முறையில் மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டுமென்பதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது, அவர்களுக்கு தலா 10 15 பேர்ச் காணி தேவையென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளேன்.

ஹற்றன் பிரதேசத்தில் அவர்களுக்கான 'ஊடக மையம்' ஒன்றை அமைத்துக்கொடுக்க, பொருத்தமான இடத்தை தெரிவுசெய்து கொடுத்தால், தேவையான உபகரண வசதிகளுடன் அமைத்துக்கொடுக்கப்படும்.

இலங்கை இந்திய ஊடகவியலாளர்களின் பரிமாற்றத் திட்டத்தை ஏற்படுத்தி ஊடக வளர்ச்சிக்கும் நவீன தொழில்நுட்ப வசதிக்கும் நடவடிக்கை எடுக்குமாறு விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் முழுமையாக பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்படும். எனவே, ஊடகவியலாளர்கள் தமது சமூகத்தின் நலன் கருதி ஒற்றுமையாகவும் நேர்மையாகவும் ஊடக தர்மத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்" என, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா ஊடகவியலாளர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் டக்ளஸ் நாணயக்கார தலைமையில் அமைச்சருக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. சுமார் 40 பேர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## நடுத்தர வருமானம் பெறும்...

காலோசிதமானதும் சுயாதீனமானதுமான பிரவேசத்துடன் சலுகை அடிப்படையிலான நிதிசார் கொள்கைகளை நோக்கிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அந்த செயற்பாட்டின் போது ஏற்படக்கூடிய அதிக செலவீனங்களை மட்டுப்படுத்துவதற்கான முறைமைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தினார்.

கடன் வழங்குநர் மற்றும் கடன் பெற்றவர்கள் மத்தியில் உயர் மட்டத்திலான கொடுக்கல், வாங்கல் செயற்பாடுகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் பூகோள அரசியல் பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளை தேடுவது அவசியமென்ற யோசனையையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்தார்.

தற்போது காணப்படும் நிலையற்ற தன்மையை போக்குவதற்கு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டுமென்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் எதிர்கொள்ளும் பெருமளவான சவால்களை வெற்றி கொள்வதற்கு அவசியமான தனியானதொரு செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கடன் வழங்குநர்கள் தொடர்பான செயற்பாடுகளின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு மற்றும் இலங்கையின் ஒருங்கிணைப்பு வேலைத்திட்டம் ஆகியவை பாராட்டுக்குரியதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பாக ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாகவும் அபிவிருத்தி மற்றும் வணிக செயற்பாடுகளுக்கு மேற்படி நாடுகளும் சீனாவும் வழங்கிய ஒத்துழைப்புகளையும் நினைவுகூர்ந்தார்.

கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் போது, கடன் பெறுநர் மற்றும் குழுக்களுடனான தொடர்புகளை பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது தலைமைத்துவம் வழங்கிய ஸ்பானிய பிரதமர் நாதியா கெல்வினோவால் (Nadia Calvino) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்கப்பட்ட கேள்வி,

**கேள்வி: — ஜனாதிபதியவர்களே, நீங்கள் தற்போது விசேடமான ஒரு நிலைப்பாட்டில் உள்ளீர்கள். நாம் தற்போது நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் தொடர்பாக அவதானம் செலுத்துவோம். இங்கு பல்வேறு சவால்கள் உள்ளன. அதேபோல், அவை பொதுவான நிலைமைகளால் உருவானது அல்ல. சாட் குடியரசின் நிலைமையை போன்றே உங்களது நிலைமையை ஒப்பிடலாம். அதேபோல், பெரிஸ் சமவாயம் மற்றும் அதன் உறுப்பினர்கள் அல்லாத கடன் வழங்குநர்களின் குழுவொன்றை உருவாக்குதல் போன்ற கடன் வழங்குநர்களின் குழுக்களில் இணைத் தலைமைத்துவத்தை வகிக்க இந்தியா தீர்மானித்துள்ளமையும் முக்கியமான விடயங்களாக சுட்டிக்காட்டலாம். மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன?**

**சாட் குடியரசு ஜனாதிபதியின் உரையில் அதிகாரிகள் வாதத்தை மட்டுப்படுத்த வேண்டுமென்பது தெரிகிறது. அதற்கு நாங்களும் இணக்கம் தெரிவிக்கிறோம். கடுமையான விடயங்களுக்கு தீர்வு காண எளிமைத்தன்மை மிகவும் அவசியமானது. அது தொடர்பாக உங்களது அனுபவம் எப்படியிருக்கிறது?**

பதில்:

"நடுத்தர வருமானம் பெறும் நாடென்ற வகையில் இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்தாக அறிவித்திருக்கும் நிலையில் பொதுவான கடன் மறுசீரமைப்பு கொள்கைகள் எமக்கு பொருத்தமற்றதாகும். சலுகை அடிப்படையிலான நிதி வசதிகளை வழங்குவதற்கான இயலுமை எம்மிடத்தில் குறைவாகவே காணப்படுகின்றது. அதேபோல், உள்ளக நிதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் பெருமளவில் முடங்கிப்போயுள்ளது. இதனால், நாம் கடன் தொடர்பான திட்டங்கள், கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதன் பின்னரே சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம்.

சரியானதொரு முறைமைக்குள் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க ஆரம்பித்த பின்னரே நிலைமையை சீராக்க எம்மால் முடிந்தது. அதற்கமைய முன்னெடுத்து செல்ல வேண்டிய திட்டங்கள் எவை? அவசியமற்ற திட்டங்கள் எவை? என்பன தொடர்பாக ஆராய்ந்து கைவிடப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக 90 சதவீமான இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. அதேபோல், மேலும் இரண்டு முக்கியமான விடயங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

அதில் முதல் விடயம் எமக்கு உதவிக்கு வந்த இந்தியாவிடமிருந்து 4 பில்லியன் டொலர்கள் கிடைத்தன. அந்த நேரத்தில் எமக்கு வேறு எந்த உதவிகளும் கிடைப்பதாக தெரியவில்லை. அடுத்தாக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் உதவிகளை பெற்றுகொள்ள முடிந்தது. அதற்கமைய, எமது இலக்கு சுமூகமான நிலைமைக்கு மாறியது.

இருப்பினும், எமது நாடு வங்குரோத்து நிலைக்கு சென்றுவிட்டதாக அறிவித்ததன் பின்னர் அதிகாரிகளின் செயற்பாடுகளில் மந்தநிலை காணப்பட்டது. அந்த தாமதம் ஏற்பட்டிருக்கா விட்டால் மே மாதமளவில் எமக்கு நிதியத்தின் உதவிகள் கிடைத்திருந்தால், குழப்பகரமான நிலைமையை சுமூகமாக்கியிருக்கலாம்.

எவ்வாறாயினும், ஜூலை மாதத்தில் உருவான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. செப்டெம்பர் மாதமளவில் நிதியத்தின் செயற்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டை அடைந்துகொள்ள முடிந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தத்தில் கைசாத்திட்டதிலிருந்து 6 மாதங்களின் பின்னரே, நிதி வசதியை எம்மால் பெற்றுக்கொள்ள முடிந்தது.

அதன்படி, நாம் முன்னெடுத்திருந்த பொருளாதார மறுசீரமைப்பு செயற்பாடுகளால் மக்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருந்தனர். அது எவ்வித முன்னறிவிப்புகளுமின்றி உருவாகிய நிலைமையாகும். தலைவர் ஆசார்யா கூறிய விடயங்களுடன் நான் இணங்குகிறேன். அந்த விடயங்களை நாம் விரைந்து செய்திருக்க வேண்டியது அவசியமாகும்.

நான் முன்பு கூறிய போது செயற்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டை செப்டெம்பர் மாதத்திலேயே அடைந்துகொள்ள முடிந்தது. நவம்பர் மாதமளவில் எம்மிடத்தில் முன்னேற்றகரமான திட்டமொன்று காணப்பட்டது. அதனை பின்னரே அறிவித்தோம். அதனைத் தொடர்ந்து இலங்கைக்குள் போட்டித்தன்மை மிகுந்த முன்னேற்றகரமான நிலைமையொன்று உருவாகியது.

அதன்படி உத்தியோபூர்வ மற்றும் தனிப்பட்ட நிதி தேவைகள் வலுவடைந்தன. இங்கு முக்கியமான விடயமொன்றை குறிப்பிட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளின் நிறைவில் மேலும் நீடிக்கப்பட்ட நிதி வசதிக்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ள முடிந்தது. கடன் மறுசீரமைப்பு தொடர்பான அடுத்த திட்டமொன்று எம்மிடத்தில் காணப்படவில்லை. அதனால், சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான உரிய திட்டமிடலை தயாரிக்க வேண்டிய அவசியம் எமக்கு உள்ளது.

எவ்வாறாயினும், மேலும் சில அனுபவங்கள் தொடர்பாக நான் கூறுகிறேன். தரவுகளுடனும் தரவுகளுக்கமையவும் செயற்பட்டமையே எமது வெற்றிக்கான காரணமாகும். நாம் எங்களது வேலைத்திட்டத்தை பின்பற்றினோமே தவிர, சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை பின்பற்றவில்லை.

பின்னர் எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுக்கான களமொன்றை உருவாக்க முயற்சித்தோம். அவர்களின் மத்தியில் பெரிஸ் சமவாயத்தின் உறுப்பினர்களும் இந்தியா, ஹங்கேரி மற்றும் ஏனைய நாடுகள் பலவும் காணப்பட்டன. இங்கு சீனா மேற்பார்வை ரீதியில் பங்குபற்றியது. நாங்கள் எம்மிடத்தில் காணப்பட்ட அனைத்து தகவல்களையும் ஏனைய தரப்புகளுடன் முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் பரிமாற்றிக்கொண்டோம். இந்த விடயத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

அதேநேரம் இந்தியா, ஜப்பான், சீனாவுடன் தனித்தனியான கலந்துரையாடலிலும் ஈடுபட்டோம். வணிக ஒருமைப்பாடுகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள் தொர்பானதாக அந்த கலந்துரையாடல்கள் அமைந்திருந்தன.

அமெரிக்கா மற்றும் சீனாவுக்கிடையில் வலுப்பெறும் விடயங்கள் தொடர்பாகவும் நாம் அவதானிக்க வேண்டும். இந்த பிரச்சினைகளை நாம் தவிர்க்க முற்படாத பட்சத்தில் ஆசியாவும் ஆபிரிக்காவும் மிகப்பெரிய நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடும். இதுவே தற்போது நாம் நிவர்த்திக்க வேண்டிய மிக முக்கிய சவாலாக காணப்படுகின்றது.

மறுசீரமைப்பு செயற்பாடுகள் அவசியம். அதற்கு நான் இணங்குகிறேன். அதனை மிக விரைவில் செய்ய வேண்டும். அதனை செய்ய தவறினால் குறைந்த வருமானம் பெறும் நாடுகள் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் அரசியல் மற்றும் பொருளாதார நிலையற்ற தன்மைக்கு முகங்கொடுக்க நேரிடும்.

எவ்வாறான சவால்கள் இருப்பினும், வங்குரோத்து நிலையை அடையும் முன்பாக மேற்படி நிலைமைகளை சீர்படுத்தினால் மிகவும் சுமூகமான நிலையை அடைந்துகொள்ள முடியும்" என, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.




# நீர்வழங்கல் துறையை டிஜிட்டல் மயமாக்குதல்

## அமைச்சர் ஜீவன் தலைமையில் பேச்சு



பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச முதலீடுகள் மற்றும் நீர்வழங்கல் துறையை டிஜிட்டல் மயமாக்குதல் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில், இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவின் பங்கேற்புடன் நடைபெற்றது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், முதலீட்டு சபை அதிகாரிகள், கொழும்பு துறைமுக நகர் ஆணையாளர், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் உட்பட துறைசார் அதிகாரிகள் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

கொழும்பில் துரித கதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'போர்ட்சிட்டிக்கு நீர்வழங்கலின் போது முழுமையாக டிஜிட்டல் முறைமையை பயன்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

"நீர்வழங்கல் அதிகாரசபை கடந்த காலங்களில் நஷ்டத்தில் இயங்கி வந்தாலும், அதனை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமைப்பதே எனது இலக்கு. அதற்கேற்ற வகையில் கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, துறைமுக அபிவிருத்தி நகருக்கு நீர் வழங்களின் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கான திட்டம் வகுக்கப்படுகின்றது." என இதன்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இதனையடுத்து நீர்வழங்கல் அமைச்சும், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் இணைந்து ஒரு குழுவை நியமிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது.

# கண்டி விவேகானந்தா ம. வித்தியாலயம் கல்லூரியாக தரமுயர்வு

(எம்.ஏ.அமீனுல்லா, நாவலப்பிட்டி நிருபர்)

கண்டியில் பழைய பாடசாலைகளுள் ஒன்றான விவேகானந்தா மகா வித்தியாலயம் நேற்றுமுதல் விவேகானந்தா கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இதனைக் கல்லூரியாக தரமுயர்த்தி புதிய பெயர் சூட்டும் வைபவம் நேற்றுமுன்தினம் (22) முற்பகல் நடைபெற்றது. கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னக்கோன் புதிய பெயருடன் கூடிய பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைத்துள்ளார். இதன்போது உரையாற்றிய கல்லூரி அதிபர் ஆர்.கலையரசி,

இப்பாடசாலை மகா வித்தியாலயமாகவிருந்து கல்லூரியாக தரமுயர்த்தப்படுவதால், இங்கு கல்வி கற்கும் மாணவிகளுக்கு கூடுதல் அங்கீகாரம் கிடைப்பதாக தெரிவித்தார்.

மத்திய மாகாண கல்வித் திணைக்கள நிர்வாகத்திற்குப் பொறுப்பான மேலதிக பணிப்பாளர் திருமதி சீ.டி. மாயாதுன்னே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில், ஒரு பாடசாலை ஆசிரிய குழாம் சிறப்பாக செயற்பட்டு மாணவர்கள் பல்வேறு வழிகளிலும் திறமை காட்டுகையில், அப்பாடசாலைக்கு சமூகத்தில் அங்கீகாரம் கிடைப்பதாக தெரிவித்தார்.

கௌரவ அதிதியாக கலந்து கொண்ட மத்திய மாகாண கல்வியமைச்சின் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.ஆர்.சத்தியேந்திரா கருத்து தெரிவிக்கையில் பிரிட்டன் காலனித்துவ ஆட்சி வரை என்ற நீண்ட வரலாற்றைக் கொண்ட விவேகானந்தா மகா வித்தியாலயம், இன்று புதிய மாற்றத்தில் காலடி எடுத்து வைப்பதாக தெரிவித்தார்.

கண்டி விவேகானந்தா கல்லூரி, 1937ஆம் ஆண்டு கண்டி பஸார் ஸ்கூல் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

இப் பாடசாலை பின்னர், சீஎம்எஸ் வித்தியாலயம் என்றும், விவேகானந்தா மகா வித்தியாலயம் என்றும் அழைக்கப்பட்டது. தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், பிரபல நடிகருமான M.G.இராமச்சந்திரனும் இப் பாடசாலையில் கற்றதாக முன்னோர்கள் கூறுவார்கள். தற்போது இங்கு 400 மாணவர்கள் கல்விகற்கின்றனர்.

# பாடசாலை மாணவன் மீது பாலியல் சேட்டை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயது பாடசாலை மாணவனொருவன் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில், சந்தேகநபர் தன்னை பெண்ணாக காட்டி சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

முகநூல் மூலம் சிறுவனுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட சந்தேகநபர், தன்னை ஒரு இளம் பெண்ணாக அடையாளம் காட்டியுள்ளார். இதனையடுத்து சிறுவனை தான் இருக்கும் இடத்துக்கு வருமாறு அழைத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியுள்ளதாக சிறுவனின் தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமைய பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. ருவன்வெல்ல மற்றும் கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பண்டாரவளை – தியத்தலாவ பஸ் சாரதிகள் பணிபகிஷ்கரிப்பு

பண்டாரவளை தியத்தலாவ வீதி இலக்கம் 186/2 சாலையில் இயங்கும் பஸ்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தியத்தலாவ பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக தியத்தலாவை பஸ் நிலையத்திலிருந்து பஸ்கள் நுழையும் மற்றும் வெளியேறும் பாதையை மாற்றியமைக்க தியத்தலாவை பொலிஸாரினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் அவர்களும் பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் தங்களுடைய கோரிக்கையை ஏற்கும் வரையில் சாலையில் பயணிக்கும் 27 தனியார் பஸ்களையும் நிறுத்தி வைத்து இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இது தொடர்பில் தியத்தலாவை பொலிஸ் நிலையத்திடம் வினவிய போது, தியத்தலாவை நகரின் மத்தியில் பல பஸ் சாரதிகள் பஸ்களை நறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் இது குறித்து பொதுமக்கள் தெரிவிக்கையில், பொலிஸார் மற்றும் பேருந்து சாரதிகள் ஆகிய இருதரப்பிலும் நியாயம் இருக்கிறது. எனினும் இதனால் பொதுமக்கள் தான் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே பயணிகளுக்கு இடையூறு ஏற்படாமல் இருதரப்பும் பேச்சுவார்த்தைக்கு வந்து உடன்படிக்கை மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

### தலவாக்கலை - வட்டக்கொடை

# மலையக ரயில் சேவைகள் வழமைக்கு



(ஹற்றன் சுழற்சி நிருபர்)

கண்டியிலிருந்து பதுளை நோக்கி நேற்று காலை பயணித்த ரயில் தலவாக்கலை வட்டக்கொடை ரயில் நிலையங்களுக்கிடையில் தடம் புரண்டதில் போக்குவரத்து தடை ஏற்பட்டு பின்னர் வழமைக்கு திரும்பியதாக நானுஓயா ரயில் நிலைய கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்தார்.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

நேற்று காலை பயணித்த சரக்கு ரயில் தலவாக்கலைவட்டக்கொடை ரயில்நிலையத்துக்கிடையில் தடம்புரண்டுள்ளது. இதனையடுத்து சரக்கு ரயிலையும், ரயில் பாதையையும் சீர்செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியிளவில் நிறைவு பெற்றது.

இதனால் மலையக ரயில் சேவை வழமைக்கு மாறியுள்ளதாக நானுஓயா ரயில் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

# பாராட்டு விழா

மலையக இந்திய வம்சாவளி மக்களின் 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை றுவன்வெல்ல ஸ்ரீகலைவாணி தமிழ் வித்தியாலத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பெருந்தோட்டங்களில் 60 வருடங்களுக்கு மேலாக தொழில்புரியும் மக்களை கௌரவிக்கும் முகமாக பாராட்டு விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர்களை கௌரவித்து சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் மதிய உணவுகள் வழங்கும் வேலைத்திட்டத்தையும் சௌமிய இளைஞர் நிதியம் மற்றும் மலையக சேவாசமாஜம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. எமது மக்களுக்கு 200 வருடங்கள் என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் இந்நிகழ்வில் பல சமய, சமூக, தொழிற்சங்க பிரமுகர்கள் பாராட்டப்படவுள்ளதாக நிதியத்தின் தலைவர் எஸ்.பி.அந்தொனிமுத்து தெரிவித்தார்.

# சேவைக்கு தயாரான 'குமுதினி'யை பார்வையிடும் அமைச்சர் டக்ளஸ்



நீண்டவரலாற்று தொடர்பை கொண்ட குமுதினிப் படகு சேவை மீண்டும் சேவையில் இணைவதற்கு தயாராகியுள்ளது. இந்நிலையில் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்டார்.

யாழ்.குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு பயணிகளுக்கான கடல் வழிப்பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட குமுதினி படகு அடிக்கடி செயலிழந்த நிலையில் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் திருத்தப் பணிகளுக்காக நிறுத்தப்பட்டிருந்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைய வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் குமுதினி படகின் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. குமுதினி படகு 1968 ஆம் ஆண்டு முதல் யாழ். நெடுந்தீவிற்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் உதயம்

# டிப்ளோமா நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாண பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் நடத்தப்படவுள்ள சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருடகால இக்கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 28 வரையாகுமென, இக்கற்கைநெறிக்கான இணைப்பாளர் பேராசிரியர் சி.சிவேசன் தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்த ஒரு வருடகால துறைசார் அனுபவமுடைய அனைவரும் இக் கற்றைநெறிக்காக விண்ணப்பிக்க முடியும்.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புகின்றவர்கள், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

# ஜூலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவு விஜயம்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜூலை மாதமளவில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.


முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தினரும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டிலும் நடமாடும் சேவையொன்று யூலை மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது. இந்த நடமாடும் சேவைக்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். போரின்போது உயிரிழந்தவர்கள், சொத்துக்களை இழந்தவர்களுக்கான நட்டஈடு கொடுப்பனவு, திருமணபதிவு சான்றிதழ், பிறப்பு பதிவு சான்றிதழ், தேசிய அடையாள அட்டை போன்றவற்றை இதுவரை பெற்றுக்கொள்ளாமல் இருப்பவர்கள் இந்த நடமாடும் சேவையின் ஊடாக சேவைகளை பெற்றுக்கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உல்லாச பயணம் விருத்தி திட்டம் தொடர்பிலும் ஜனாதிபதியால் புதிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

# பாடசாலை மாணவிகளின் பாதுகாப்பை பலப்படுத்த

### பிரதி பொலிஸ் மாஅதிபர் விசேட நடவடிக்கை

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெண்கள் பாடசாலைகளில் வகுப்பு ரீதியாக வட்ஸ்அப் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் மாணவிகளின் பெற்றோரின் தொலைபேசி இலக்கங்கள் இணைக்கப்படவேண்டுமெனவும் அவை வகுப்பு ஆசிரியைகளால் கையாளப்பட வேண்டுமென மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி அதில் மாணவிகள் தொடர்பான அவதானிப்புக்கள் பதிவிடப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதின்ம வயதினர் தொடர்பான குற்றங்களைக் குறைக்கும் நோக்கில் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மாணவிகள் பாடசாலைக்கு சமுகமளிக்காவிட்டால் உடனடியாக இந்தக் குழுக்கள் ஊடாக பெற்றோருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், மாணவிகள் பாடசாலைக்கு வரும் வாகன விவரங்கள், சாரதிகளின் கைபேசி இலக்கங்கள் போன்றவையும் இந்தக் குழுக்களில் பகிரப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்தந்த பொலிஸ் பிரிவிலுள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிகளினால் மேற்பார்வை செய்யப்படும் எனவும் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாடசாலை அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் விழித்திரை சத்திரசிகிச்சைகள் ஆரம்பம்

(யாழ். விசேட நிருபர்)



யாழ்.போதனா வைத்தியசாலையில் விழித்திரை சத்திரசிகிச்சைகள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

விழித்திரை சத்திர சிகிச்சையானது, சத்திர சிகிச்சை நிபுணர் இல்லாத காரணத்தினாலும் சத்திர சிகிச்சைக்கு தேவையான பொருட்கள் இல்லாத காரணத்தினாலும் கடந்த 2 வருடங்களாக நடைபெறவில்லை.

இந்நிலையில் தற்பொழுது விழித்திரை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஷைலா பரதன் பதில் கடமையேற்றுள்ளார்.

அவர் தமது சேவையினை மக்களுக்கு வழங்கு முகமாக வாரத்துக்கு ஒருமுறை ஆறு பேர் வீதம் 100 சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளார். ALAKA Foundation, Malaysia நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் இந்நிகழ்ச்சித்திட்டமானது யாழ். போதனா வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# கிழக்கின் குரல்



## ஐக்கிய தேசியக் கட்சியின் ஆரம்ப கொள்கைகள்

# ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலத்திலும் வெளிவந்துள்ளது

### ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

டி.எஸ்.சேனநாயக்க ஐ.தே கட்சியை ஆரம்பிக்கின்றபோது இருந்த கொள்கைகள் தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலத்திலும் வந்துள்ளது. ஜனாதிபதி அனைத்து மக்களையும் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற வேறுபாடுகளின்றி இலங்கையர்கள் என்ற நோக்குடனேதான் பார்க்கின்றார். என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.



மற்றத்திற்கோர் ஆரம்பம் எனும் தொனிப் பொருளில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக்கான கூட்டம் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார பங்கேற்புடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவர் எஸ். சுதர்சனின் ஏற்பாட்டில் களுதாவளையில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் வியாழக்கிழமை (22) மாலை நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

1942 ஆம் ஆண்டிலே ஐக்கிய தேசிக் கட்சி ஆரம்பித்தது எல்லா இனங்களும் இலங்கையர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவேதான்; காலம் கடந்ததன் பின்னர் இந்நாட்டிலுள்ள மக்கள் பல பிரிவினர்களாகவிருந்து பல கட்சிகளை ஆரம்பித்தார்கள். பின்னர் மக்கள் பல குழுக்களாக இணைந்தார்கள். 1942 இலே மக்களிடத்திலே இருந்த இலங்கைர்கள் என்ற உணர்வு பின்னர் பிரிவினைகளாகியது. இந்த பிரிவினைகளை ஏற்படுத்தியதும் அரசியல்வாதிகளேதான். இதனால் நாடு 75 வருடங்களாக பின்னோக்கிச் செல்வதை எதிர்நோக்க நேரிட்டது.

சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் இனங்களாகவும். மதங்களாகவும் அரசியலிலே பேதத்தை ஏற்படுத்தி விட்டார்கள். இதனால் அரசியல்வாதிகள் பலம்வாய்ந்தவர்களாகவும் மக்கள் தாழ்ந்தவர்களாகவும் மாறி விட்டனர்.

எனவே எமது நாடு சுதந்திரமடைந்து நூற்றாண்டை கொண்டாடுகின்றபோது எமது நாடு முன்னேறிய நாடாக மாறவேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து எமது கட்சி சார்பாகவும் உறுப்பினர்களைத் தெரிவு செய்யப்படல் வேண்டும். அவ்வாறு நடைபெற்றால்தான் நாம் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வுடன் வேலை செய்ய முடியும் என அவர் தெரிவித்தார்.

# கோட்டை கல்லாறு முத்துமாரி அம்மன் திருச்சடங்கு ஆரம்பம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கோட்டைக்கல்லாறு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவம் திங்கட்கிழமை (26) இரவு 6.30 மணிக்கு திருக்கதவு திறந்தலுடன் ஆரம்பமாகி எதிர்வரும் ஜூலை 03 ஆம் திகதி திங்கட்கிழமை நிறைவடையவுள்ளது.

தொடர்ந்து எட்டு தினங்கள் ஆலய உற்சவம் நடைபெறவுள்ளது. இதில் 01ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு பூரண கும்பம் நிறுத்தலும்,தீக்குழி மூட்டுதல், தவநிலை ஆகியன நடைபெறவுள்ளது.

02 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நெற்தானிய காணிக்கை (மடிப்பிச்சை), விநாயகப் பானை எழுந்தருளப் பண்ணல், இரவு 8 மணிக்கு கன்னி காத்தான் வைத்து எழுப்புதல், இரவு 10 மணிக்கு திருச்சடங்கு நடைபெற்று திருக்குளிர்த்தி பாடுதல் நடைபெறும் 03 ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு அம்மன் ஊர்வீதி வலம் வந்து சமுத்திரத்தில் திருக்கும்பம் விடுதல் நடைபெற்று காலை 5 மணிக்கு அம்மனின் திருக்கதவு அடைத்தலுடன் உற்சவம் நிறைவடையவுள்ளது.

## மக்கள் வங்கி இந்து மாமன்றம் கதிர்காம

# பாதயாத்திரிகர்களுக்கு 500 உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

மக்கள் வங்கியின் இந்து மாமன்றத்தினர் வருடாந்தம் நடத்திவரும் கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கான உலருணவுப் பொதி வழங்கி வைக்கும் நிகழ்வு இம்முறையும் உகந்தையில் நடைபெற்றது.

அம்பாறை பிராந்திய முகாமையாளர் திருமதி எம். எம். ஏ. அமரசிறி தலைமையில் உணவுப்பொதிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

பாதயாத்திரிகர்கள் 500 பேருக்கு மக்கள் வங்கி இலச்சினை பொறித்த பைக்குடன் 500 உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. குமண தேசிய சரணாலய முன்றலில் வைத்து மக்கள் வங்கியின் இந்து மாமன்ற உறுப்பினர்களால் இப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கு மக்கள் வங்கியின் அம்பாறை, மொனராகலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி ஆகிய பிரதேச மக்கள் வங்கியின் இந்து மாமன்ற உறுப்பினர்கள் பங்களிப்புச் செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



கிழக்கிலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு வந்தாறுமூலை ஸ்ரீ மகாவிஷ்ணு தேவஸ்தானத்தின் தேர் வெள்ளோட்ட நிகழ்வு நேற்று முன்தினம் பக்தர்கள் புடை சூழ சிறப்பாக நடைபெற்ற போது,... (படங்கள்: பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

# திருகோணமலை மாவட்ட ஹோட்டல் வலையமைப்பு அங்குரார்ப்பணம்



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்ட ஹோட்டல் வலையமைப்பு அங்குரார்ப்பண வைபவம் (21) திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் ஏ.பி. மதனவாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுற்றுலாத்துறை விருத்தி மற்றும் வலையமைப்பை பதிவு செய்வதன் ஊடாக திருகோணமலை மாவட்டத்தின் சுற்றுலாத்துறை தொழில்வாண்மையான துறைகளில் முன்னேற்றம் காண்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதில் தலைவராக திருப்பதி துறையும்,செயலாளராக எஸ்.சக்தீபன்,பொருளாளராக எஸ்.பிரியதர்சினி உட்பட ஏனைய நிருவாக குழு உறுப்பினர்கள்,ஆலோசனை குழு என தெரிவுகள் நடைபெற்றது.

இதில் மாகாண சுற்றுலா பணியக பொது முகாமையாளர் டாக்டர் ஞானசேகரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆளுநர் செந்தில் தொண்டமான் காத்தான்குடி அல் அக்ஸா ஜும்மா பள்ளிவாசலுக்கு விஜயம்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று (23) வெள்ளிக்கிழமை காத்தான்குடிக்கு விஜயம் செய்தார். இதன் போது காத்தான்குடி அல் அக்ஸா ஜும்மா பள்ளிவாசலுக்கு சென்ற கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை பள்ளிவாசல் நிர்வாகத்தினர் வரவேற்றனர்.

பள்ளி வாசலுக்கு ஜும்ஆ தொழுகைக்காக வருகை தந்திருந்த பொது மக்களையும் ஆளுநர் சந்தித்தார்

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநருக்கு காத்தான்குடி நகர சபையின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவமளிக்கப்பட்டதுடன் அல் அக்ஸா ஜும்மா பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி ஆதம்லெவ்வை பள்ளிவாசல் தலைவர் கே.எல்.எம் பரீட் ஆகியோர் இணைந்து புனித அல் குர்ஆன் பிரதி ஒன்றினையும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்தனர்.

இதன் போது பள்ளிவாசலை சுற்றி பார்வையிட்டு ஆளுநர் கிழக்கு மாகாணத்தில் சிறந்த ஒரு பள்ளிவாசலாக இந்த பள்ளிவாசல் திகழ்வதுடன் அனைத்து சமூகத்தினரும் வந்து பார்வையிடும் இடமாகவும் சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தரும் இடமாகவும் முன்னுதாரணமாக இந்த பள்ளிவாசல் செயல்படுவதாகவும் தெரிவித்தார். இன நல்லுறவுக்கு இந்த பள்ளிவாசல் ஒரு தளமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதையடுத்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள ஈச்ச மரங்களை பார்வையிட்டதுடன் காத்தான்குடி நகர சபை செயலாளர் ரிப்கான் ஷபீன் ஈச்சம் மரத்திலிருந்து அறுவடை செய்யப்பட்ட ஈச்சம் பழங்களை கிழக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்தார்.

# சமுர்த்தி சிப்தொர கல்விப் புலமைப் பரிசில்

**ஒலுவில் விசேட நிருபர்**



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி நலன் பெறும் பயனாளிகளின் கா.பொ.த உயர் தரம் கற்க தகுதி பெற்ற மாணவர்களுக்கு 'சமுர்த்தி சிப்தொர கல்விப் புலமைப் பரிசில்' வழங்கும் வைபவம் புதன்கிழமை (21) பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லா தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரி.எம்.எம்.அன்சார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவை வழங்கி வைத்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள 28 கிராம சேவகர் பிரிவில் சமுர்த்தி நலன் பெறும் குடும்பங்களில் க.பொ.த.(சா.த) சித்தியடைந்து தற்போது 2022/2024 ம் கல்வியாண்டில் உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் 102 மாணவர்களுக்கு மாதாந்தம் 1,500 ரூபா வீதம் ஒரு மாணவனுக்கு 24 மாதங்களுக்கு தலா 36,000 ரூபா வீதம் மொத்தமாக 102 மாணவர்களுக்கும் இரண்டு வருடங்களுக்குமாக 36 இலட்சத்து 72 ஆயிரம் வழங்கப்படவுள்ளதாக முகாமையாளர் தெரிவித்தார்.

2023 பெப்ரவரி தொடக்கம் மே மாதம் வரையான நான்கு மாதங்களுக்கான முதற்கட்ட கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபா வீதம் சகல மாணவர்களுக்கும் 6 இலட்சத்து 12 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

# திருகோணமலையில் கைவிடப்பட்ட நிலையில் யானைக்குட்டி மீட்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மூன்று மாதமேயான யானைக் குட்டியொன்றினை மீட்டுள்ளதாக கந்தளாய் பிராந்திய வனஜீவராசிகள் அத்தியட்சகர் தெரிவித்தார்.

கந்தளாய் 20 ஆம் கட்டை சந்திப்பகுதியில் வீதியில் நின்ற நிலையில் நேற்று முன்தினம் (22)மாலை மீட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

குட்டி யானைக்கு கண்ணில் நோய் ஏற்பட்டதால் தாய் கைவிட்டுள்ளதாக வனஜீவராசிகள் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மாடு மேய்ப்பவர்களினால் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய யானைக் குட்டி மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யானைக்குட்டியை கிரித்தென வனஜீவராசிகள் சரணாலயத்தில் விடுவிக்கப்படவுள்ளதாகவும் வனஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# மக்களை நிம்மதியாக வாழவிடுமாறு மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



மக்களை நிம்மதியாக வாழவிடுமாறும் இலங்கைப் பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடுவதைக் கண்டித்தும் நேற்றுக் காலை மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவிற்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

'பயங்கரவாத பிரிவினைக்கு கனடா ஆதரவா? இதுவா அமைதி இதுவா நீதி' 'ஐ.நாவின் கோட்பாடுகளை மீறி கனடா அரசு இலங்கை உள் விவகாரங்களில் தலையிடுவதை கண்டிப்போம்' 'எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும் ஆர்ப்பாட்டக்காரார்கள் ஏந்தியிருந்தனர்.

யுத்தம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள், யுத்தத்தினால் இடம் பெயர்ந்து அவலங்களை எதிர் கொண்டவர்கள். யுத்தம் முடிவின் பின்னரே அமைதியான வாழ்க்கை வாழுகின்றோம்.இத்தகைய அமைதியை குழப்பாதீர்கள் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோஷங்களை எழுப்பினர்.

# முதல் தொகுதி பட்டதாரிகளை உருவாக்கிய செலிங்கோ லை.ஃ.ப்பின் பிரத்தியேகமான SLIM டிப்ளோமா



நிதி விற்பனை முகாமைத்துவத்துக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட டிப்ளோமா பாடநெறியை 30 பேர் கொண்ட செலிங்கோ லை.ப்பின் விற்பனைப் பிரதிநிதிகள் அண்மையில் பூர்த்தி செய்து தமது தொழில்துறையில் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் SLIM ஒத்துழைப்புடன் ஆயுள் காப்புறுதி தலைவர்களின் விற்பனையாளர்களுக்கென இந்தப் பாடநெறி பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

செலிங்கோ லைஃப் நிறுவனம் ஆற்றல், அறிவு, போட்டித்தன்மை என்பனவற்றை விற்பனைப் பிரதிநிதிகள் மத்தியில் மேம்படுத்தும் வகையில் இந்த ஓராண்டு; பாடநெறியை அறிமுகம் செய்துள்ளது. பிரதான சந்தைகளுக்குள் ஊடுறுவி வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமான சேவைகளை வழங்கக் கூடிய வகையில் அதி உயர் தொழில்சார் பணபுகளைக் கொண்ட விற்பனைப் படையொன்றை உருவாக்கும் வகையில் இது அமைந்துள்ளது என்று கம்பனி அறிவித்துள்ளது.

நிதி திட்டமிடல், தொடர்பாடல், மதிப்பீட்டு திறன் அபிவிருத்தி, நேர முகாமைத்துவம், நிதிச் சந்தைகள், வரிவிதிப்பு போன்ற விரிவான பாடநெறிகளுடன் மேலும் பல அம்சங்களும் இந்த டிப்ளோமா நெறியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் பற்றி கருத்து வெளியிட்ட செலிங்கோ லைஃப் பணிப்பாளரும் பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான ரங்க அபேநாயக்க "இந்தப் பாடநெறியை பின்பற்றுபவர்களின் தொழில்சார் அபிவிருத்திக்கு மட்டுமன்றி, சிறந்த ஆலோசனைகளை வழங்கக் கூடிய விற்பனை பிரதிநிதிகளை சேவைக்கு அமர்த்துவதன் மூலம் வாடிக்கையாளரின் நனல்களுக்கும் இது பல்வேறு விதங்களில் நன்மை அளிக்கின்றது. இதன் மூலம் வாடிக்கையாளர் எவ்வாறு சிறந்த முறையில் தமது காப்புறுதிகளை கட்டமைத்துக் கொள்ள முடியும் அதன் மூலம் உடனடி மற்றும் எதிர்கால தேவைகளில் அவர்கள் எவ்வாறு கவனம் செலுத்த முடியும் என்பதையும் திட்டமிட்டுக் கொள்ள முடியும். எமது ஊழியர்களின் ஆற்றல்களில் முதலீடு செய்வதில் நாம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம். அவர்களின் நிபுணத்துவம் மூலம் எமது வாடிக்கையாளர்கள் நேரடி நன்மைகளைப் பெறுகின்றனர் என்பதையும் நாம் அங்கீகரிக்கின்றோம்" என்று கூறினார்.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் தலைவர் சின்தக பெரேரா "SLIM தொழில்சார்தன்மையை வளர்ப்பதற்கு அர்ப்பணத்துடன் பணியாற்றி வரும் ஒரு நிறுவனம் ஆகும். அந்த வகையில் தனது ஊழியர்கள் அவர்களின் தொழில் தராதரத்தை மேம்படுத்திக் கொள்ள உரிய கல்வித் தராதரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவதில் செலிங்கோ லைஃப் காட்டிய ஆர்வம் மெச்சத்தக்கது. இந்த டிப்ளோமாதாரிகளின் குறிப்பிடத்தக்க தேவைகளை நிறைவேற்றும் வகையில் பாடவிதானத்தை அபிவிருத்தி செய்வதில் செலிஙகோவுடன் பணியாற்றக் கிடைத்தமை எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது" என்றார்.

# புதிய ட்ரக் மற்றும் பஸ் டயர்களை அறிமுகம் செய்துள்ள சியெட் களனி நிறுவனம்

தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

வாயு மூலமான டயர்களை உற்பத்தி செய்யும் இலங்கையின் மிகப் பெரிய நிறுவனமான சியெட் களனி ஹோல்டிங்ஸின் உற்பத்தி வரிசையில் அதிஉயர் செயற்பாடு மிக்க புதிய வர்த்தக நோக்கு டயர் தற்போது வீதிகளில் வலம் வரத் தொடங்கி உள்ளது.

Winmile X3 AW எனப் பெயரிடப்பட்டுள்ள ட்ரக் பஸ் ரேடியல் டயர் 295/80 R22.5 TL அளவு கொண்டது. இது பிரைம் மூவர்ஸ், பெற்றோல் பவுஸர்கள், பாரிய சீமெந்து தாங்கி ரக வாகனங்கள் உட்பட ஏனைய பெரிய வகையிலான போக்குவரத்து மற்றும் பயணிகள் வாகனங்கள் மற்றும் இலங்கையில் பாவணையில் உள்ள கனரக ட்ரக்குகளுக்கு மாற்றுவதற்கான உசிதமான உற்பத்தியாகும் என நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கையின் இன்றைய நிலையில் இறக்குமதிகளைக் குறைத்து அந்நிய செலாவணியை மீதப்படுத்தும் தேசிய முயற்சிக்கு ஆதரவளிக்கும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சியெட் Winmile X3 AW டயர் Renault 460 DXI, DAF XF 105/510, Tantri TBK 43, MAN PGS 440 Isuzu Giga Truck Mixer, UD Nissan Prime Mover, DAF CF 321 Dynamic 33,000 33இ000 லீற்றர் எரிபொருள் பவுசர்கள், சீமெந்தை காவிச் செல்லும் வண்டிகள் மற்றும் Lanka Ashok Leyland, Yutong and King Long. ரக பயணிகள் பேருந்து என்பனவற்றுக்கும் உகந்தவையாகும்.



உற்பத்தி தினத்தில் இருந்து மூன்று வருட கால உத்தரவாதத்துடன் கிடைக்கும் இவை மேலதிக மைல்களுக்கு உகந்த வகையிலும், இலங்கையின் வீதி நிலைமைகளுக்கு ஏற்ப சிறந்த செயற்பாட்டை வழங்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று கம்பனி அறிவித்துள்ளது.

"இது ஒரு பிரீமியம் வகை உற்பத்தியாகும். இலங்கையின் போக்குவரத்து துறை தேவையை நாம் எந்தளவு ஆழமாகப் புரிந்து வைத்துள்ளோம் என்பதையும் சந்தையில் ஏற்பட்டுள்ள சவால்களைக் கடந்து புதிய உற்பத்திகளை எந்தளவு அர்ப்பண்ப்புடன் நாம் தொடருகின்றோம் என்பதையும் இது பிரதிபலிக்கின்றது" என்று கூறினார் சியெட் களனி ஹோல்டிங்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி டட்லானி. "எமது டயர் வாடிக்கையாளர்கள் மத்தியில் செலவுகள் அதிகரித்து வருகின்ற நிலையில் போட்டித்தன்மை மிக்க விலைகளுடன் கூடிய உற்பத்திகளின் தேவையும் அதிகரித்துள்ளது. எமது புதிய உற்பத்திகள் மூலம் நாம் இந்தத் தேவைக்கு முகம் கொடுத்துள்ளோம்" என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கை மற்றும் இந்திய கூட்டு முயற்சிகளில் மிகவும் வெற்றிகரமானதாகக் கருதப்படும் இலங்கையில் உள்ள சியெட் களனி உற்பத்தி வளாகம் இலங்கையின் மொத்த டயர் தேவையில் அரைவாசியை உற்பத்தி செய்கின்றது. இலங்கையில் இந்த கூட்டு முயற்சியின் மீதான ஒட்டு மொத்த முதலீடு இன்றைய நிலையில் 8 பில்லியன்கள் ஆகும். இலங்கையில் இதன் உற்பத்தி செயற்பாடுகள் றேடியல் டயர்களில் (பயணிகள் கார்கள், வேன்கள் மற்றும் விளையாட்டு நோக்கு வாகனங்கள்) வர்த்தக ரீதியான (நைலோன் மற்றும் றேடியல்) மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள் மற்றும் விவசாயப் பிரிவு வாகனங்கள் என்பனவற்றை உள்ளடக்கயதாக காணப்படுகின்றன.

# பொருளாதார ரீதியாக உறுதியான முடிவுகளை கொள்கைகளாக உருவாக்கும் செயற்பாட்டில் வணிகத் தலைவர்களை ஈடுபடுத்துமாறு COYLE கோரிக்கை

இலங்கை இளம் தொழில்முனைவோர் சம்மேளனம் தனது 24ஆவது ஆண்டு விழாவை கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நடாத்தியிருந்தது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தன; கௌரவ விருந்தினராக அமெரிக்க தூதுவர், ஜூலி சங், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் ஷவேந்திர சில்வா, அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்; இலங்கையின் முப்படைகளின் தளபதிகள்,அரச அதிகாரிகள் மற்றும் வணிகத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையின் மிகவும் செல்வாக்கு மிக்க சில நிறுவனங்களின் தலைவர்களாகவும் மற்றும் சில நிறுவனங்களின் பங்குடைமையாளர்களைக் கட்டுப்படுத்துபவர்களாகவும் பணியாற்றுகின்ற 116 இற்கும் மேற்பட்ட முக்கியஸ்தர்களை, இலங்கை இளம் தொழில்முனைவோர் சம்மேளனம் கொண்டுள்ளது. இது 500 இற்கும் மேற்பட்ட உறுப்புரிமை கொண்ட அமைப்புகளைக் கொண்டுள்ளதோடு, நாட்டில் சுமார் 50 வணிக சம்மேளனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இளம் தொழில்முனைவோரால் நிர்வகிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆயினும் COYLE சம்மேளனத்தை இன்றைய நிலைக்கு கொண்டு வருவதற்காக உதவுவதற்கு, அதன் ஆரம்ப வருடங்களில் நிறுவனத்தில் இணைந்த பல சிரேஷ்ட மற்றும் மரியாதைக்குரிய வணிகத் தலைவர்களையும் அது பெருமைப்படுத்துகிறது. இச்சம்மேளனம் தொழில்முனைவு, கிராமப்புற சமூகங்களின் வளர்ச்சி மற்றும் சிந்தனைத் தலைமை ஆகியவற்றை தீவிரமாக ஊக்குவிக்கிறது. வலுவாகக் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணங்கி, சமூகத்திற்கான கட்டாய சேவையாக, நாடு முழுவதும் உள்ள அதன் உறுப்பு நிறுவனங்கள் மூலம் எண்ணற்ற பெருநிறுவன சமூக பொறுப்பு (CSR) முயற்சிகளில் COYLE ஈடுபட்டு வருகின்றது. இச்சம்மேளனம் அதன் உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு தலைமைத்துவம், கற்றல் மற்றும் அபிவிருத்தி விடயங்களை வழங்குவதோடு, பல ஆண்டுகளாக, இலங்கையில் பல உள்ளூர் மற்றும் உலகளாவிய வலையமைப்புகள் மூலம் வணிக வளர்ச்சிக்கான ஒரு பயண ஊடகமாக வளர்ந்துள்ளது.



இலங்கைப் பொருளாதாரத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் மிகவும் சவாலான ஒன்றாக கடந்த வருடம் அமைந்திருந்தது. இது குறித்து கருத்து தெரிவித்த COYLE சம்மேளனத்தின் தலைமை பதவியிலிருந்து செல்லவுள்ள திமுத் சங்கம சில்வா தனது உரையில், "இந்த வருடம் எமது திறமைக்கு மிகப்பெரிய சோதனையாக அமைந்தது. வைரங்கள் கூட அழுத்தத்தினாலேயே உருவாகின்றன. அந்த வகையில் எல்லாத் திசைகளிலிருந்தும் வருகின்ற அழுத்தங்களைக் கொண்டு பிரகாசிக்க இவ்வருடம் வாய்ப்பளித்தது. இதில் நாம் பிரகாசித்தோம் என்று நான் நம்புகிறேன். நாம் இங்கு வாழ்கிறோம், மீண்டெழுகிறோம் எமது வணிகங்கள் வளர்கின்றன, சர்வதேச சந்தைகள் மற்றும் பிரதேசங்களை நாம் கையகப்படுத்துகிறோம், COYLE பாய்ச்சல்களையும், தடங்களையும் தாண்டி வளர்ந்து வருகின்றது." என்றார்.

இச்சம்மேளனம் அதன் உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு தலைமைத்துவம், கற்றல் மற்றும் அபிவிருத்தி விடயங்களை வழங்குவதோடு, பல ஆண்டுகளாக, இலங்கையில் பல உள்ளூர் மற்றும் உலகளாவிய வலையமைப்புகள் மூலம் வணிக வளர்ச்சிக்கான ஒரு பயண ஊடகமாக வளர்ந்துள்ளது.



சிலோன் மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கத்தின் (CMTA) தலைவர், சாரக்க பெரேரா

# வாகன இறக்குமதிக்கான நிலைபேறான அணுகுமுறையை முன்மொழிந்துள்ள CMTA

வாகன இறக்குமதியை மீண்டும் அமுல்படுத்துவது தொடர்பில் அண்மையில் எழுந்துள்ள பல்வேறு வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க, சிலோன் மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம் (CMTA) ஆனது, ஒரு முனைப்பான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. பொருளாதாரத்திற்கு நன்மையளித்தல், மக்களின் போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்தல், அரச வருமானத்தை உறுதி செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, ஒரு விரிவான முன்மொழிவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் CMTA சமர்ப்பித்துள்ளது.

குறித்த முன்மொழிவானது, இரண்டு முக்கிய பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதியானது, வாகன இறக்குமதி மீதான தற்காலிகத் தடையை படிப்படியான மற்றும் இடைவிட்ட அணுகுமுறை மூலம் நீக்குவதற்கு வலியுறுத்துகிறது. ஆரம்ப கட்டமாக இரு சக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களையும், அதனைத் தொடர்ந்து வர்த்தக தேவை வாகனங்களையும், இறுதியாக பயணிகள் வாகனங்களையும் இறக்குமதி செய்தல்.

இத்திட்டத்தின் இரண்டாம் பகுதியானது, அதிக வரியுடன், காலாண்டின் அடிப்படையிலான குறைப்புடன், மேலதிக 130% எனும் வரி விதிப்புக்கு உட்பட்டு வாகனங்களை இறக்குமதி செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த முறையான அணுகுமுறையானது, இரண்டு வருட காலத்திற்குட்பட்டு, ஒவ்வொரு காலாண்டிலும் 15% வரி குறைப்புடன், வரிக் கட்டமைப்பை அதன் தற்போதைய நிலைமைக்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பைப் பாதுகாக்கும் வகையிலான ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் நிலைபேறான இறக்குமதி நடைமுறைகளின் தேவை என்பது CMTA இனால் முன்னிலைப்படுத்தப்பட்ட முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும்.

CMTA வில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவரும், தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் உற்பத்தியாளர்களால் கணக்காய்வு செய்யப்படுவதோடு, அவர்கள் இறக்குமதி செய்யும் வாகனங்கள், நாட்டிற்கு விசேடத்தும் கொண்ட குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டு உரிய தொழிற்சாலைகளிலிருந்து நேரடியாக அனுப்பி வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



கடந்த பொசன் போயா தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் புண்ணிய பூமிக்கு வருகை தந்த பக்தர்களுக்கு அவர்களுக்குத் அவசியமான விடயங்களை வழங்கும் நோக்கில் மலிபன் பிஸ்கட் நிறுவனம் அதன் 'மலிபன் யஹகுணயே உத்தம பிரணாம' நிகழ்ச்சித் தொடரில் மற்றுமொரு திட்டத்தை முன்னெடுத்திருந்தது. இங்கு வருகை தரும் பக்தர்களுக்கு மலிபன் பிஸ்கட் தேநீர் தானம் மற்றும் மதிய அன்னதானம் ஆகியவையும், சக்கர நாற்காலி சேவை உட்பட பல திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன.

# உலகளாவிய Uber உறுப்பினர் திட்டமான 'Uber One' இலங்கையில் அறிமுகம்



கொழும்பு, ஜூன் 16, 2023: Uber நிறுவனமானது Uber சவாரிகள், விநியோகம் மற்றும் மளிகை பண்டங்கள் ஆகியவற்றில் சிறந்தவற்றை ஒன்றிணைக்கும் புத்தம் புதிய உறுப்பினர் திட்டமான Uber One ஐ இலங்கையில் அறிமுகப்படுத்துவதாக இன்று அறிவித்தது. Uber இன் உலகளாவிய உறுப்பினர் திட்டமானது அதன் சவாரிகள் மற்றும் விநியோகம் ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் தள்ளுபடிகள் மற்றும் பிரத்தியேக அனுபவங்களை வழங்குகிறது. அத்தோடு. இதன் மூலம் Uber அங்கத்தவர்கள் தமது அன்றாட வாழ்க்கையை எவ்வித இடையூறுகளுமின்றி கடந்து செல்ல கூடியதாக இருக்கும்.

Uber இலங்கையில் பிரவேசித்ததில் இருந்து, இலங்கையில் உள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு 'எங்கும் செல்லுங்கள், எதையும் பெற்றுக்கொள்ளுங்கள்' என்ற அதன் உலகளாவிய வாக்குறுதியை உயிர்ப்பித்துள்ளது. Uber One இன் அறிமுகத்துடன், இந்த நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு சேமிப்பும் உயர்ந்த அனுபவத்தையும் அன்றாடம் வழங்கும். வேலைக்குச் சென்று திரும்பும் சவாரி, மேசையில் இரவு உணவைப் பெறுதல் அல்லது குளிர்சாதனப்பெட்டியில் பண்டங்களை சேர்த்தல் என எதுவாக இருந்தாலும், Uber One ஆனது அதன் உறுப்பினர்களுக்கு மட்டுமேயான மேம்படுத்தல்களை வழங்கும்.

இன்று, Uber One உறுப்பினர் திட்டம் இலங்கை முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. Uber அல்லது Uber Eats செயலியில் சில எளிய வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் இதன் உறுப்பினர்களாக முடியும். இவ்வசதி அனைவருக்கும் ஒரு மாத காலத்திற்கு பரீட்சார்த்த ரீதியில் இலவசமாக வழங்கப்படும்.

மாதத்திற்கு ரூபாய் 599 அல்லது ஆண்டுக்கு LKR 5999க்கு, Uber One உறுப்பினர்களுக்கான பிரத்தியேக சலுகைகள் வழங்கப்படும். அத்தோடு, உறுப்பினர்கள் சிறப்புச் சலுகைகள் மற்றும் விளம்பரங்கள் போன்ற சலுகைகளுக்கான பிரத்தியேக அணுகலையும் பெறுவார்கள். அதுமட்டுமல்லாது, முன்னுரிமை அளிக்கப்பட்ட ஆதரவுடன் கூடிய பிரத்தியேக அழைப்புக்கான அனுபவங்களையும் Uber One அங்கத்தவர்கள் பெறுவார்கள்.

***Uber பற்றி***

இயக்கத்தின் மூலம் வாய்ப்பை உருவாக்குவதே Uber இன் நோக்கம் ஆகும். ஒரு எளிய சிக்கலைத் தீர்க்கும் நோக்கோடு 2010 ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடங்கினோம்: ஒரு பொத்தானை அழுத்தும்போது சவாரிக்கான அணுகலை எவ்வாறு பெறுவது? 15 பில்லியனுக்கும் அதிகமான பயணங்களுக்குப் பின்னர், மக்கள் அவர்கள் இருக்க விரும்பும் இடத்திற்குச் செல்ல உதவும் தயாரிப்புகளை நாம் உருவாக்குகிறோம். நகரங்கள் வழியாக மக்கள், உணவுபொருட்கள் மற்றும் ஏனைய பண்டங்கள் கொண்டு செல்லப்படும் முறையை மாற்றுவதன் மூலம் Uber என்பது புதிய சாத்தியக்கூறுகளுக்கு உலகைத் திறக்கும் ஒரு தளமாக மாறியுள்ளது.

***Uber Eats பற்றி***

Uber Eats ஆனது, உள்ளூர் உணவகங்களைத் தேடவும் அவற்றைக் கண்டறியவும், ஒரு பொத்தானை அலுத்துவதன் மூலம் உணவை பெற்றுக்கொள்ளவும், நம்பகத்தன்மையுடனும் விரைவாகவும் விநியோகம் செய்யவும் உபயோகப்படுகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு Uber Eats செயலியை அறிமுகப்படுத்தியதில் இருந்து இந்த வணிகமானது Uber இன் தொழில்நுட்பம் மற்றும் சரக்கியக்க நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி உலகளவில் 6,000 க்கும் மேற்பட்ட நகரங்களுக்கு சேவை செய்துள்ளது.

# கலாநிதி ஜனகன் தயாரித்திருக்கும் ஈழவாணியின் லூஸி திரைப்படம்

## கொழும்பு றொக்ஸி திரையரங்கத்தில் இன்று விசேட காட்சி






டாக்டர் வி. ஜனகன் பூவரசி புறடக்சன் மூலமாக தயாரித்த ஈழவாணியின் லூஸி திரைப்படம் கொழும்பு றொக்ஸி திரையரங்கத்தில் 24.06.2023 இன்று திரையிடப்படுகின்றது.

பெரும் சர்ச்சையைக் கிளப்பிய லூஸி, யாழ்ப்பாணம், வவுனியாவைத் தொடர்ந்து கொழும்பிலும் திரையிடப்படுகின்றது.

இலங்கைத் திரைப்பட வரலாற்றில் இது ஒரு மைல்கல் என்றே சொல்ல வேண்டும்.

பெண்களை மையப்படுத்தி, அவர்களின் பாலியல் கொடுமைகளை எடுத்துக் கூறும் திரைப்படமான இதில் ஆண்களின் கொடூர முகம் மட்டுமல்ல, பெண்களின் பொறுப்பில்லாத் தனமுமே வன்கொடுமைகளுக்கு மூல காரணம் என எடுத்துக் கூறுகிறது.

இந்தக்காலத்திற்கு ஏற்ப பொருத்தமான கருத்தை வெளிப்படுத்தும் இத்திரைப்படம் பெண் முதன்மைக் கதாப்பாத்திரத்தைப் பெற்றிருக்கிறது. முதன்மைப் கதாப்பாத்திரத்தில் நடிகை பூர்விகாவும் இதயராஜாவும் நடித்திருக்கிறார்கள், அபஜன் கணேஸ், ஜொனி, நிலுஜன் போன்றவர்களுடன் சுகிர்தன் சி, கௌசிராஜ், சாசாசெரின், சுவிகரன் சர்மிலா வினோதினி அழகுதிலகா, கலா மோகன், அண்ரூ யூலியஸ், யாழ் தர்மினி பத்மநாதன், அலெக்ஸ் கோபி, கார்த்திக் சிவா , கிளின்ரன், ஆர்கே போன்றவர்களும் பணியாற்றியுள்ளார்கள்.



மேலும் பத்மஜன் இசையிலும், றெஜிசெல்வராசாவின் ஒளிப்பதிவிலும், வில்ஸியின் படத்தொகுப்பிலும் லூஸி நிறைவடைந்திருக்கிறது.

ஐம்பதிற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பணியாற்றியிருப்பது என்பது படத்தின் தனிச்சிறப்பு.

# சீனாவை எவ்வாறு கையாள்வது என்பதே இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் முன்னுள்ள முக்கிய பிரச்சினை

## அமெரிக்க முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பொல்டன்

பிரதமர் மோடியின் வொஷிங்டன் விஜயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பொல்டன், இந்தியப் பிரதமரை உலகத் தலைவர் என வர்ணித்ததோடு அமெரிக்காவும் இந்தியாவும் இப்போது எதிர்கொண்டிருக்கும் பெரும் பிரச்சினை, சீனாவை எவ்வாறு கையாள்வது என்பதாகவே உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஏ.என்.ஐ. செய்திச் சேவையுடன் பேசிய பொல்டன், இரு தலைவர்களுக்கும் இடையில் பேசுவதற்கு முக்கிய விஷயங்கள் இருப்பதாகவும் ஆனால் பாதுகாப்பு விடயத்தில் நெருங்கி உறவாடுவதில் ஒரு பிரச்சினை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்தியா ரஷ்யாவிடமிருந்து சமீபத்தில் எஸ்.400 ரக ஆகாய பாதுகாப்பு பொறிமுறையை பெற்றுக்கொண்டமை, முன்னேற்றம் கண்ட நவீன பாதுகாப்பு தொழில்நுட்பங்கள், 'ஸ்டெல்த்' தொழில்நுட்பம் என்பனவற்றை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்வதில் அமெரிக்காவுக்கு நெருக்கடியை தோற்றுவித்துள்ளதாகக் கருதுகிறோம். எனினும் ரஷ்ய பாதுகாப்பு உறவில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதில் இந்தியாவுக்கு சிரமம் இருப்பதை புரிந்து கொள்ள முடிகிறது என்றும் அவர் கூறினார்.

இந்தோ பசுபிக் பிராந்திய நாடுகள் மீதும், இந்திய எல்லைப்புறமாகவும் சீனா மேலாதிக்க மனப்பான்மையுடன் நடந்து கொள்ள முனைவது பிரச்சினையான விஷயமாகவே அமெரிக்காவும் கருதுகிறது என்று குறிப்பிட்ட பொல்டன், சீனாவில் முதலீடு செய்துள்ள அமெரிக்க, ஜப்பானிய, அவுஸ்திரேலிய மற்றும் ஐரோப்பிய நிறுவனங்கள் சீனாவில் இருந்து விலகிச் செல்ல முயற்சிப்பதால், ஆங்கிலம் தெரிந்தோர் லட்சக்கணக்கில் வசிக்கும் இந்தியா இதைத் தனக்கான வாய்ப்பாகக் கருதலாம் என்றார்.






# விமான உதிரி பாகங்கள் மேற்பரப்பு சுத்திகரிப்பு மையம்

## விமானத் தளபதியால் திறந்து வைக்கப்பட்டது

பாலாவி இலங்கை விமானப்படை தளத்தில் புதிதாக நிறுவப்பட்ட விமான உதிரி பாகங்கள் மேற்பரப்பு சுத்திகரிப்பு மையம் 2023 ஜூன் 20 ஆம் திகதி விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன் பத்திரனவால் திறந்து வைக்கப்பட்டது. விமானப்படையின் பொறியியல் திறன்களை மேம்படுத்துவதில் இது ஒரு தனித்துவமான மைல்கல்லைக் குறிக்கிறது.

இதன்மூலம் F7 மற்றும் K8 விமானங்களை மாற்றியமைக்கும் செயல்பாட்டின் போது உதிரிப் பாகங்களின் மேற்பரப்பு சிகிச்சையை எளிதாக்குவதற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த பணிமனையின் வடிவமைப்பை சீனா ஏவியேஷன் டெக்னாலஜி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தின் நிபுணர்கள் குழு மேற்கொண்டதுடன் பழுதுபார்ப்பு மற்றும் உபகரணங்கள் நிறுவுதல் ஆகியவை அவர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மேற்பரப்பு சிகிச்சை மையம் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகளின்படி பரந்த அளவிலான மேற்பரப்பு பூச்சுகளைக் கொண்டுள்ளதோடு மின் முலாம், பிரகாசமான பூச்சுகள் பல்வேறு வகையான மேற்பரப்பு முறைகள் என்பன சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த அதிநவீன இயந்திரங்களின் வெற்றிகரமான செயல்பாடு விமானப்படையின் பொறியியல் திறன்களை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், சகோதர சேவைகள் மற்றும் வெளி நிறுவனங்களுக்கு மதிப்பு மிக்க சொத்தாக செயல்படுகிறது. துறைமுக அதிகாரசபை ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மற்றும் பிற சம்பந்தப்பட்ட அமைப்புகள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த வசதிகளை விரிவுபடுத்த முடியும்.



இந்த திறப்பு விழாவில் விமானப்படை தலைமை தளபதி, பிரதி தலைமை தளபதி, பணிப்பாளர்கள், கட்டுநாயக்க விமானப் படை தள விமான பராமரிப்பு பிரிவின் கட்டளை அதிகாரி மற்றும் சீன தேசிய விமான தொழில்நுட்ப இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பிரதிநிதிகள் குழுவினரும் கலந்து கொண்டனர்.









# "கிரமி விருதை" பெற்ற இசையமைப்பாளர் புகழாரம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் முன் முயற்சிகள் காரணமாக யோகா இன்று உலகெங்கும் பிரபல்யமாகி இருக்கிறது என்று கிரமி விருதை வென்ற இசையமைப்பாளர் ரிக்கி கெட்ஜ் ஏ.என்.ஐ. செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார். 21ஆம் திகதி ஐ.நா. தலைமையகத்தில் நிகழ்ந்த சர்வதேச யோகா தின நிகழ்வில் பிரதமர் மோடி கலந்துகொண்டு உரையாற்றினார். அந் நிகழ்வில் ரிக்கி கெட்ஜும் பங்கேற்றிருந்தார்.

பிரதமர் மோடியும் அமெரிக்க அதிபரும் நட்புணர்வுடன் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் உலகம் நன்மையடையும் என்றும் பிரதமரின் வருகையால் அமெரிக்காவுக்கு நன்மைகள் கிடைக்கும் என்றும் தெரிவித்த அவர், முன்னாள் இந்தியா சர்வதேச ரீதியான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதில்லை என்றும் சர்வதேச நகர்வுகளில் பங்களிப்பு செய்வதில்லை என்றும் குறிப்பிட்டதோடு, இனிமேல் இந்தியா ஓரமாக அமர்ந்து வேடிக்கை பார்க்க வேண்டியதில்லை, இந்தியா இனிமேலும் தென்புல தலைவர் அல்ல. சர்வதேச தலைமை வகிக்கும் நாடு என்று அவர் மோடியையும் இந்தியாவையும் புகழ்ந்துரைத்தார்.

பிரதமர் மோடிக்கான வெள்ளை மாளிகை வரவேற்பு நிகழ்வில் மூன்று கிரமி விருதுகளைப் பெற்ற ரிக்கி கெட்ஜும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஓமானை இலகுவாக வீழ்த்தியது இலங்கை




ஓமானுக்கு எதிரான உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியீட்டிய இலங்கை அணி தனது பி குழுவில் முதலிடத்தை பெற்று சுப்பர் சிக்ஸ் சுற்றை நெருங்கியுள்ளது.

புலவாயோவில் நேற்று (23) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது. எனினும் துடுப்பெடுத்தாட வந்த ஓமான் அணியின் விக்கெட்டுகளை ஒன்றன் பின் ஒன்றாக வீழ்த்த இலங்கை பந்துவீச்சாளர்களால் முடிந்தது.

அதிரடியாக பந்துவீசிய வனிந்து ஹசரங்கவின் பந்துக்கு முகம்கொடுக்க ஓமான் வீரர்கள் தட்டுத் தடுமாறினர்.

இதன்மூலம் அவர் 7.2 ஓவர்களில் 13 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

உபாதை காரணமாக நேற்றைய போட்டியிலும் துஷ்மந்த சமீர ஆடவில்லை.

என்றாலும் வலதுகை வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் துலிப் மெண்டிஸின் பயிற்சியில் ஆடும் ஓமான் அணி முதல் இரு தகுதிகாண் போட்டிகளிலும் அயர்லாந்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தை வீழ்த்தி முன்னிலை பெற்றபோதும் இந்தப் போட்டியில் முழுமையாக பின்னடைவை சந்தித்தது.

மத்திய வரிசையில் வந்த அயான் கான் அதிகபட்சமாக 41 ஓட்டங்களை பெற்ற நிலையில் மூவர் மாத்திரமே இரட்டை இலக்கங்களை எட்டினர்.

இதில் நான்கு வீரர்கள் டக் அவுட் ஆகியமை குறிப்பிடத்தக்கது. இறுதியில் ஓமான் அணி 30.2 ஓவர்களில் 98 ஓட்டங்களுக்கே சுருண்டது.

இலகுவான இலங்கை நோக்கி பதிலெடுத்தாட வந்த இலங்கை ஆரம்ப வீரர்களான திமுத் கருணாரத்ன மற்றும் பத்தும் நிசங்க இருவரும் இலகுவாக அந்த இலங்கை அடைந்தனர்.

இலங்கை 15 ஓவர்களிலேயே விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. திமுத் ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களை பெற்றதோடு பத்தும் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களை சேர்த்தார்.

இலங்கை அணி நாளை (25) தனது மூன்றாவது குழுநிலை போட்டியில் அயர்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டியும் புலவாயோவில் நடைபெறும்.

# கொழும்பு-சோண்டர்ஸ் பலப்பரீட்சை நாளை

### முன்னாள் வீரர்களுக்கு இலவசம்



சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து போட்டியின் கொழும்பு மற்றும் சோண்டர்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி நாளை (25) பிற்பகல் 3.30க்கு கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இம்முறை தொடரில் முதல் போட்டியில் ஆடும் மாளிகாவத்தை யூத் அணி இன்று (24) பிற்பகல் 3.30க்கு மொரகஸ்முல்ல அணியை எதிர்கொள்ளவுள்ளது.

முதல் வாரத்தில் நடைபெற்ற இரண்டு போட்டிகளும் வெற்றி தோல்வி இன்றி நிறைவடைந்த நிலையில் சோண்டர்ஸ், ஜாவாலேன், மொரகஸ்முல்ல மற்றும் கொழும்பு கால்பந்து கழகங்கள் புள்ளிகளை பெற்றுள்ளன.

மொரகஸ்முல்ல–கொழும்பு கால்பந்து கழகங்களுக்கு இடையிலான போட்டி 1–1 என்ற கோல்களால் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்ததோடு, சோண்டர்ஸ் மற்றும் ஜாவாலேன் அணிகளுக்கு இடையிலான போட்டியும் 2–2 என சமநிலை பெற்றது.

சிட்டி லீக் தலைவர் கிண்ண தொடரில் வெற்றிபெறும் அணிக்கு 150,000 ரூபா பணப்பரிசும், இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கு 100,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படுவதோடு, அந்த கால்பந்து லீக்கின் தலைவர் ஆர். புவனேந்திரன் தனது தனிப்பட்ட பணத்தில் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்தப் போட்டிகளை இலவசமாக பார்க்கும் வாய்ப்பு முன்னாள் கால்பந்து வீரர்களுக்கு வழங்குவதற்கு போட்டி ஏற்பட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர். அதற்காக இலங்கை கால்பந்து சம்மேளனம் வழங்கிய வீரர்களுக்கான அடையாள அட்டை வீரர்கள் உள்நுழைவதற்கு அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நியூசிலாந்துக்கு எதிரான இலங்கை குழாம் அறிவிப்பு



இலங்கை வந்திருக்கும் நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கை மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் பங்களாதேஷுக்கு எதிரான தொடரில் ஆடிய குழாத்தில் எந்த மாற்றமும் செய்யாமல் நியூசிலாந்து தொடருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்காகவே நியூசிலாந்து அணி இலங்கை வந்துள்ளது. இரு தரப்பு தொடர் ஒன்றில் ஆடுவதற்காக நியூசிலாந்து மகளிர் அணி இலங்கை வந்திருப்பது இது முதல் முறையாகும்.

இதில் இலங்கை மற்றும் நியூசிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையினால் ஒருநாள் போட்டிகள் காலி சர்வதேச மைதானத்தில் எதிர்வரும் ஜூன் 27 தொடக்கம் ஜூலை 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடர் ஐ.சி.சி மகளிர் சம்பியன்சிப்பின் அங்கமாக இடம்பெறும். இதில் இலங்கை 9 போட்டிகளில் 2 வெற்றிகளை மாத்திரம் பெற்று தற்போது 7 ஆவது இடத்தில் இருப்பதோடு நியூசிலாந்து 6 போட்டிகளில் 3 வெற்றிகளுடன் 3 ஆவது இடத்தில் காணப்படுகிறது.

15 பேர் கொண்ட இந்த ஒருநாள் குழாத்திற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஒப்புதல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை குழாம்: சாமரி அத்தபத்து (தலைவி), ஹர்ஷிதா சமரவிக்ரம, விஷ்மி குணரத்ன, அனுஷ்கா சஞ்சீவனி, ஹாசினி பெரேரா, நிலக்ஷி டி சில்வா, கவீஷ டில்ஹாரி, ஓஷதி ரணசிங்க, சுகந்திகா குமாரி, இனோகா ரணவீர, உதேஷிகா பிரபோதனி, ஹன்சிமா கருணாரத்ன, இனோசி பெர்னாண்டோ, காவ்யா காவிந்தி, இமேஷா துலானி.

# உலகக் கிண்ணம்: பாக். அரசு கருத்து



இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ண போட்டியில் பாகிஸ்தான் பங்கேற்பது தொடர்பிலான அனைத்து அம்சங்களையும் மதிப்பீடு செய்து வருவதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் உலகக் கிண்ணத்தில் பங்கேற்பது அந்நாட்டு அரசு வழங்கும் ஒப்புதலிலேயே தங்கியிருக்கும் நிலையில் அந்நாட்டு அரசு இந்த விடயம் தொடர்பில் முதல் முறை கருத்து வெளியிட்டுள்ளது.

“கிரிக்கெட்டை பொறுத்தவரை விளையாட்டில் அரசியல் கலக்கக் கூடாது என்பதே பாகிஸ்தானின் நிலைப்பாடாகும். பாகிஸ்தானில் கிரிக்கெட் ஆடுவதில்லை என்ற இந்தியாவின் கொள்கை ஏமாற்றம் தருகிறது. பாகிஸ்தான் வீரர்களுக்கான பாதுகாப்பு உட்பட உலகக் கிண்ணத்தில் நாம் பங்கேற்பதற்கான அனைத்து அம்சங்களையும் மதிப்பீடு செய்து வருகிறோம்” என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மும்தாஸ் சஹரா பலோச் தெரிவித்தார்.

# 'ஒலிம்பிக் ஈஸ்போட்ஸ்' போட்டியில் இலங்கை சார்பில் பிரயன் பங்கேற்பு



மோட்டார் விளையாட்டுக் கழகம் மற்றும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரயன் பெரேரா, நாளை (25) நடைபெறவுள்ள முதலாவது ஒலிம்பிக் ஈஸ்போட்ஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.

மோட்டார் போட்டிகள் பிரிவில் ஈஸ்போட்ஸ் வாரத்தில் போட்டியிடவுள்ள முதலாவது இலங்கையராக இவர் உள்ளார்.

பிரயன் 2007ஆம் ஆண்டு தொடக்கம் போட்டிகளில் கலந்துகொண்டு வருகிறார். கார்ட்டிங் போட்டியில் ஆரம்பித்த இவர் போர்மியுலா ஈ.எப்.ஐ இல் சம்பியனானார். தொடர்ந்து இவர் பல போட்டிகளிலும் வெற்றியீட்டி சாதனை படைத்துள்ளார்.

ஒலிம்பிக்ஸ் ஈஸ்போட்ஸ் தொடர் உலகளாவிய ரீதியிலான மெய்நிகர் மற்றும் உருவகப்படுத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியாகும் என்பதுடன், முதலாவது ஒலிம்பிக்ஸ் ஈஸ்போட்ஸ் வாரம் ஜூன் 22 முதல் 25ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறுகிறது.

உலகளவில் மொத்தம் 160,000 க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் தகுதிச் சுற்றுக்கு ஒன்லைன் மூலம் பதிவுசெய்திருப்பதுடன், பிரயன் CMSC ஓட்டுநர் வரிசையில் இருந்து அதிவேக ஓட்டுநராகத் தகுதி பெற்றார். மேலும் சிங்கப்பூரில் நடைபெறும் இறுதிப் போட்டியில் உலகின் அதிவேக ஓட்டுநர்களில் 32 பேருக்கு எதிராக இவர் போட்டியிடவுள்ளார்.

# முறையற்ற பந்துவீச்சு: அமெ. பந்துவீச்சாளர் இடைநிறுத்தம்




பந்தை எறிவதாகக் கண்டறியப்பட்டதை அடுத்து அமெரிக்க வேகப்பந்து வீச்சாளர் கைல் பிலிப் சர்வதேச போட்டிகளில் பந்து வீசுவதை சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தியுள்ளது.

ஹராரேவில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக கடந்த ஜூன் 18 ஆம் திகதி நடைபெற்ற உலகக் கிண்ண தகுதிகாண் முதல் போட்டியில் பிலிப்பின் பந்துவீச்சு பாணி குறித்து போட்டி அதிகாரிகள் முறையிட்டனர். பின்னர் அவர் நேபாளத்திற்கு எதிரான போட்டியில் ஆடியபோதும் நெதர்லாந்துக்கு எதிராக கடந்த வியாழனன்று (22) நடைபெற்ற போட்டியில் இடம்பெறவில்லை.

இந்நிலையில் பிலிப்பின் பந்துவீச்சு பாணியை ஆய்வு செய்திருக்கும் ஐ.சி.சி போட்டிக் குழு, அவரது பந்துவீச்சு முறையற்றது என முடிவுக்கு வந்திருப்பதோடு, ஐ.சி.சியின் 6.7 விதிகளுக்கு அமைய பந்துவீசுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளார்.

பிலிப் தனது பந்துவீச்சு முறையானது என ஆய்வின் மூலம் உறுதி செய்யும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும்.

26 வயதான பிலிப் அமெரிக்க அணிக்காக 6 ஒருநாள் போட்டிகளில் ஆடி ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

# குத்துச்சண்டை சம்மேளனத்தை ஒலிம்பிக் குழு அதிரடி நீக்கம்



நிதி மற்றும் ஒழுக்காற்று விவகாரங்களில் சீர்திருத்தங்களை பூர்த்தி செய்யத் தவறிய சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்தை அதன் அந்தஸ்தில் இருந்து சர்வதேச ஒலிம்பிக் குழு நீக்கியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை (22) நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் குழுவின் விசேட அமர்வில், ஒலிம்பிக் சம்மேளனத்தை நீக்க 69 ஆதரவு வாக்குகள் கிடைத்ததோடு ஒரு வாக்கு மாத்திரமே அதற்கு எதிராக பதிவானது. பத்து உறுப்பினர்கள் வாக்களிப்பதை தவிர்த்துக்கொண்டனர்.

சர்வதேச ஒலிம்பிக் குழு தலைவர் தோமஸ் பெச் தலைமையிலான நிர்வாக சபையினால் இரண்டு வாரங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட பரிந்துரை அடிப்படையிலேயே இந்த வாக்கெடுப்பு இடம்பெற்றது.

எனினும் 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை விளையாட்டு இடம்பெறும் என்று ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

“குத்துச்சண்டை விளையாட்டை நாம் அதிகம் மதிக்கிறோம். அதன் நிர்வாக சபை காரணமாக சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்துடன் எமக்கு மிகவும் கடுமையான பிரச்சினை உள்ளது” என்று இந்த ஒன்லைன் கூட்டத்தில் பெச் சர்வதேச ஒலிம்பிக் குழு உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

உஸ்பக் மற்றும் ரஷ்ய ஜனாதிபதியின் கீழ் சர்வதேச ஒலிம்பிக் குழு செயற்படுவது சர்ச்சையை ஏற்படுத்தி இருப்பதோடு அதற்கு ரஷ்ய அரச வலுசக்தி நிறுவனமான காஸ்பிரோம் நிதி அளிப்பது தொடர்பில் ஒலிம்பிக் குழு எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது.

# ஹராரே மைதானத்தில் தீ: போட்டிக்கு பாதிப்பில்லை



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள் நடைபெறும் சிம்பாப்வேயின் ஹராரே மைதானத்தில் ஏற்பட்ட தீ எதிர்கால போட்டிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் பழமையான கிரிக்கெட் மைதானங்களில் ஒன்றான ஹராரே விளையாட்டு கழக வளாகத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டதால் ரசிகர்கள் கவலையடைந்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை (20) நடந்த போட்டியில் நெதர்லாந்துக்கு எதிராக சிம்பாப்வே 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, மைதானத்தின் தெற்கு முனையில் இந்த தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீ மைதானத்தில் இருந்த சில மரங்களிலும் பரவியது. எனினும் அங்கு விரைந்த தீயணைப்பு படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். தொடர்ந்து ஐ.சி.சி சிறப்புக் குழு ஒன்று மைதானத்தை சோதித்துப் பார்த்த பின் மைதானத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் ரசிகர்களுக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதையும் உறுதி செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து நேபாளம் மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான ஏ குழுவுக்கான போட்டி எந்தத் தடங்கலும் இன்றி கடந்த வியாழக்கிழமை (22) இந்த மைதானத்தில் நடைபெற்றது.

இந்த மைதானத்தில் குழு நிலை போட்டிகள், சுப்பர் சிக்ஸ் போட்டிகளுடன் உலகக் கிண்ண தகுதிகாண் இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது.


இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 24ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.